# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 வைகாசி 12 திங்கட்கிழமை (26-05-1997) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:179

# ஓமந்தைக்கு வடக்கே தொடர்ந்து கடும் சமர்!

## திரும்பிச் செல்ல ஏற்பாடு

வவுனியா, மே 26

தமது இடங்களிலிருந்து கடமை நிமித்தம் தெற்கே வந்த பின்னர், திரும்பிச் செல்ல முடியாத நிலையில் வவுனியாவில் தங்கி நிற்கும் மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு அரச ஊழியர்கள் இன்று மடு வீதி வழியாக தமது இடங்களுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளனர். (உ)

## தபால்கள் அனுப்ப ஏற்பாடு

வவுனியா, மே 26

மன்னார் பெருநிலப்பரப்பு, முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய பகுதிகளுக்கான தபால்கள் இன்று வவுனியாவிலிருந்து மடுவீதி வழியாக அப்பிரதேசங்களுக்கு எடுத்துச்செல்லப்படும் என வவுனியா செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-3-164)

## 3 கி. மீற்றர் தூரம் படையினர் நகர்வு

வவுனியா, மே 26

'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கையின் இரண்டாம் கட்டத்தை ஆரம்பித்திருக்கும் ஸ்ரீலங்காப் படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் -- ஓமந்தைக்கு வடக்கே -- கடுஞ் சண்டை வெடித்திருக்கின்றது.

பெரிய எடுப்பில் படை நகர்வை ஆரம்பித்த ஸ்ரீலங்கா இராணுவம் நேற்று மாலை ஓமந்தைக்கு வடக்கே மூன்று கிலோ மீற்றர் தூரம் வரையே முன்னேற முடிந்ததாகத் தெரியவந்தது.

சனியன்று காலையில் தமது இரண்டாவது கட்ட நடவடிக்கையை படையினர் ஆரம்பித்தது தெரிந்ததே.

அகோர விமானக் குண்டு வீச்சு, கடும் ஷெல் மற்றும் பீரங்கித் தாக்குதல்கள் சகிதம் ஆயிரக்கணக்கான அரச படைகள் தொடர்ந்து

(8 ஆம் பக்கம் பார்க்க)

## சனியன்று மோதலில் ஆறு புலிகள் களப்பலி!

வவுனியா, மே 26

ஓமந்தையில் இருந்து வடக்கு நோக்கி கடந்த சனியன்று இரண்டாம் கட்ட இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்த படையினருடன் சனியன்று இடம் பெற்ற மோதலில் தமது தரப்பில் 6 பேர் களப்பலியானதாக விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர்.

அன்றைய மோதலில் 20 படையினர் கொல்லப்பட்டதாகவும் ''புலிகளின் குரல்'' வானொலி அறிவித்தது. (உ-164-3)

## கைப்பற்றிய பகுதிகள் கைவிடப்பட மாட்டா!

### இராணுவத் தளபதி உறுதி

கொழும்பு, மே 26

''தற்போதைய இராணுவ நடவடிக்கை மூலம் கைப்பற்றப்படும் ஒவ்வொரு அங்குலப் பிரதேசத்தையும் தக்கவைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்'' — என்று இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் றோஹான் தளுவத்த உறுதி கூறியிருக்கின்றார்.

''தற்போதைய நடவடிக்கை மூலம் ஓமந்தை, நெடுங்கேணி வரை படையினர் பெரும் பிரதேசத்தைக் கைப்பற்றியுள்ளனர். இந்தப் பிரதேசங்களை படையினர் கைவிட்டுச் செல்லமாட்டார்கள். இந்தப்பிரதேசங்கள் எப்படியும் தக்க வைத்துக் கொள்ளப்படும்'' — இவ்வாறு அவர் மேலும் கூறினார். (உ-150-3)

## புளியங்குளம் பகுதியில் கடும் சண்டை வெடிக்கும்?

லண்டன், மே 26

''ஓமந்தையில் இருந்து முன்னேறும் படையினர் புலிகளின் பலமான கோட்டையான புளியங்குளம் பகுதியில் கடும் எதிர்ப்பைச் சந்திக்க நேரிடும். அங்கு கடும் சண்டை நடக்கும் என எதிர்பார்க்கலாம்.'' — இவ்வாறு நேற்றிரவு கருத்து வெளியிட்டது பி. பி. ஸி. தமிழ்ச் சேவை. (உ-3)

## பாலம்பட்டாறில் நேற்று மோதல் சம்பவம்

திருகோணமலை, மே 26

திருகோணமலை மாவட்டத்தில் பாலம்பட்டாறு பகுதியில் ரோந்து சென்ற இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நேற்றுக் காலை மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

இம் மோதலில் இராணுவச் சிப்பாய் ஒருவர் காயமடைந்தார். விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த மூவர் உயிரிழந்ததாக படை வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-3-5-150)

## செட்டிகுளத்தில் நேற்று கண்ணிவெடி!

கொழும்பு, மே 26

நேற்று முற்பகல் 11.30 மணியளவில் வவுனியாவில் இருந்து செட்டிகுளம் நோக்கிச் சென்றுகொண்டிருந்த படை வாகனம் ஒன்று சுடுவெந்தபுலவு என்ற இடத்தில் கண்ணிவெடியில் சிக்கியது.

இதில் படையினர் ஒருவர் கொல்லப்பட்டதாகவும் மூவர் காயமடைந்ததாகவும் அறிவிக்கப்பட்டது. (உ-21-3)

## அமைச்சரவை மாற்றம் நிறுத்தப்பட்டது ஏன்?

### பல காரணங்கள் தெரிவிப்பு

கொழும்பு, மே 26

மாலைதீவில் நடந்த ''சார்க்'' மாநாட்டில்கலந்து கொண்டு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நாடுதிரும்பியதும் அமைச்சரவை மாற்றம் இடம்பெறும் என எதிர்பார்க்கப்பட்ட போதும்—

அமைச்சரவை மாற்றத்தை ஜனாதிபதி நிறுத்தி வைத்துள்ளார் என்று இப்போது தகவல் வெளியாகியுள்ளது.

என்ன காரணத்துக்காக அமைச்சரவை மாற்றத்தை ஜனாதிபதி நிறுத்தி வைத்துள்ளார் எனத் தெரிவிக்கப்படாத போதும்—

சுகாதார, நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஏ. எச். எம். பௌஸி தமது அமைச்சை மாற்றினால் அரசில் இருந்து இராஜினாமாச் செய்வேன் என்று ஜனாதிபதிக்கு எச்ச

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வெள்ளவத்தையில் தமிழர் வீட்டில் தேடுதல் நடத்திய சிப்பாய் சூடு!

### கோப்ரல் பலி; வீட்டுக்காரர் காயம்

கொழும்பு, மே 26

வெள்ளவத்தையில் தமிழர் ஒருவர் வீட்டில் நேற்று முன்தினம் நள்ளிரவு வேளையில் தேடுதல் நடத்திய படையினர் அங்கு மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் மற்றொரு கோப்ரல் உயிரிழந்தார், அந்த வீட்டில் இருந்த தமிழரான தந்தையும், மகளும் காயமடைந்தனர்.

வெள்ளவத்தை றொக்ஸி கார்டின் பகுதியில் உள்ள தமிழர்களின் வீடுகளை சம்பவ தினம் இரவு பொலீஸாரும் இராணுவத்தினரும் இணைந்து சுற்றி வளைத்து தேடுதல் நடத்தினர்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் கான்ஸ்டபிள் சுட்டுக் கொலை!

### மட்டு. பிள்ளையாரடியில்

மட்டக்களப்பு, மே 26

மட்டக்களப்பு பிள்ளையாரடி பொலீஸ் காவல் நிலையத்தைச் சேர்ந்த தமிழ் கான்ஸ்டபிள் ஒருவர் நேற்றுக்காலை 7 மணியளவில்— சைக்கிளில் வந்த — விடுதலைப் புலிகள் என நம்பப்படும் — ஒருவரால் சுட்டுக்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## பகலில் ஆட்லறி வீச்சு! இரவில் நேரடிச் சமர்!!

ஓமந்தைக்கு வடக்கே இராணுவம் முன்னேற முயலும் பகுதிகளில் பெரும்பாலும் இரவு வேளைகளிலேயே கடும் சமர் இடம்பெறுவதாக எமது வவுனியா செய்தியாளர் தெரிவிக்கின்றார்.

தாம் கைப்பற்றிய பகுதிகளை பலப்படுத்த முயலும் படையினர் மீது புலிகளும், தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு அப்பாற்பட்ட இடங்களில் எதிர்த்தாக்குதல் நடவடிக்கைகளின் தயாரிப்பு வேலைகளில் ஈடுபட்டிருக்கும் புலிகள் மீது படையினரும் பகல் நேரத்தில் திடீர் திடீரென ஆட்லறித் தாக்குதல்களை நடத்திவருகின்றார்கள்.

பெரும்பாலும் இரவு வேளைகளில் இருதரப்பும் முன்னே நகர்ந்து நேருக்கு நேர் பொருதி வருகின்றன. (உ-3-164)

## பதிலளிக்க மறுத்த இராணுவப் பேச்சாளர்

கொழும்பு, மே 26

வன்னி இராணுவ நடவடிக்கை குறித்து கொழும்பில் உள்ள வெளிநாட்டு ராஜதந்திரிகளுக்கு இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் திஸ்ஸ ஜயதுங்க கடந்த செவ்வாய்க்கிழமை விளக்கமளித்தார்.

பாதுகாப்பு அமைச்சுக்கு ராஜதந்திரிகள் அழைக்கப்பட்டு விளக்கமளிக்கப்பட்டனர். அப்போது யுத்தம் குறித்து ராஜதந்திரிகள் பலவித கேள்விகளை எழுப்பினர் என்றும் —

பாதுகாப்புக் காரணங்களைக் காட்டி இராணுவப் பேச்சாளர் பல கேள்விகளுக்கு பதில் அளிக்க மறுத்து விட்டார் என்றும் — தெரிவிக்கப்பட்டது. (உ-150-3)

## கைப்பற்றியபகுதிகளுக்கு கடற்படை, பொலீஸ்!

வவுனியா, மே 26

'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கை மூலம் படையினர் கைப்பற்றிய பிரதேசங்களைப் பாதுகாத்து தக்க வைக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக கடற்படையினரும், பொலீஸாரும் தொடர்ந்து அப்பிரதேசங்களுக்கு அனுப்பப்பட்டு வருகின்றனர்

நேற்று முன்தினம் 3 ஆயிரம் கடற்படையினர் அப்பகுதிக்கு அனுப்பப்பட்டதாக ஏற்கனவே செய்திகள் வெளியாகியிருந்தது தெரிந்ததே.

நேற்றும் பத்து பஸ்களில் கடற்படையினர் அப்பகுதிக்கு அனுப்பப்பட்டதாக எமது வவுனியாச் செய்தியாளர் அறிவிக்கிறார். (உ-164-3)

## சென்னையில் இன்று உண்ணாவிரதம்!

கொழும்பு, மே 26

வன்னியில் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள இராணுவ நடவடிக்கையை நிறுத்தும்படி இலங்கைக்கு அழுத்தம் கொடுக்குமாறு இந்திய அரசை வற்புறுத்தவும் —

இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ளும் இலங்கை அரசைக் கண்டித்தும் —

சென்னை வள்ளுவர் கோட்டத்துக்கு முன்பாக இன்று அடையாள உண்ணாவிரதம் மேற்கொள்ளப்படவிருக்கிறது.

இன்று காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை உண்ணாவிரதம் நடைபெறும்.

இந்த உண்ணாவிரதத்தை ஈ.என். டி. எல்.எவ். அமைப்பு ஏற்பாடு செய்துள்ளது. (உ-150-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்க் கட்சிகளை ஓரணியில் கொண்டு வருவதற்கு முயற்சி!

## கொழும்புத் தமிழர் நடவடிக்கைக்குழு களத்தில்!!

கொழும்பு, மே 26

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு இராணுவ அணுகுமுறை மூலம் தீர்வு காண்பதைவிட்டு, பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாணும் நிலையை உருவாக்குவதற்காக சகல தமிழ்க் கட்சிகளையும் ஓரணியின் கீழ் கொண்டுவரும் முயற்சியில் கொழும்புத் தமிழர் நடவடிக்கைக் குழு ஈடுபட்டுள்ளது.

இந்த நடவடிக்கைக் குழுவின் இருமுக்கிய பிரமுகர்கள் தமிழ்க் கட்சித் தலைவர்களுடன் இது தொடர்பாக பேச்சுக்கள் நடத்தி வருகின்றனர்.

போர் நிறுத்தம், 3 ஆம் தரப்பு மத்தியஸ்தம், திம்பு மாநாட்டின் அடிப்படையில் அரசியல் பேச்சு ஆகிய மூன்று அம்சங்களையும் முன்வைத்து இக்குழு தமிழ்க் கட்சிகளுடன் பேச்சுக்கள் நடத்தி வருகிறது.

இந்த மூன்று அம்சங்களும் தமிழ்க் கட்சிகளிடையே பொதுக் கருத்து ஒன்றை ஏற்படுத்தும் நடவடிக்கையின் ஒரு கட்டமாக நேற்று கொழும்பில் கூட்டம் ஒன்றுக்கும் ஏற்பாடாகியிருந்தது.

இலங்கையில் தமிழர் தேசிய இனம் என்பதும் -

தமிழ்த் தேசிய இனத்துக்கு சுயநிர்ணய உரிமை உண்டு என்பதும் —

வடக்கு — கிழக்கு தமிழரின் மரபுவழித் தாயகம் என்பதும் —

திம்பு மாநாட்டின் போது தமிழ்க் கட்சிகளினால் ஏகோபித்த முறையில் முன்வைக்கப்பட்ட அடிப்படை அம்சங்களாக இருந்தன.

இந்தப் போக்கில் சகல தமிழ்க் கட்சிகளையும் இணக்கப்பாட்டுக்குக் கொண்டுவர முடியும் என்று அந்தக் குழுப் பிரமுகர்கள் நம்பிக்கை வெளியிட்டனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணி, புளொட், தமிழ்க்காங்கிரஸ், ரெலோ, ஈ. பி. டி. பி. ஈரோஸ், ஈ.பி.ஆர்.எல்.எவ். ஆகிய தமிழ்க் கட்சிகளுக்கு நேற்றைய கூட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இவற்றில் ஒரு கட்சி தவிர்ந்த ஏனையவை நேற்றைய கூட்டத்தில் பங்குபற்றும் எனக் கூட்ட அமைப்பாளர்கள் நேற்றுக் காலை நம்பிக்கை வெளியிட்டிருந்தனர்.

இ. தொ. கா., மலையக மக்கள் முன்னணி ஆகியவற்றுக்கும் இக்கூட்டத்தில் பங்குபற்ற அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. (உ-150-3)

# தலைநகரில் தீவிர பாதுகாப்பு

## பொலீஸார் தகவல்

கொழும்பு, மே 26

கொழும்பு நகரிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக பொலீஸார் அறிவித்துள்ளனர்.

விடுதலைப் புலிகளின் தற்கொலைப் படையினர் உட்பட புலிகளின் உறுப்பினர்களும் கொழும்புப் பிரதேசத்தினுள் ஊடுருவியிருப்பதால் அவர்களைக் கைது செய்வதற்காக பலத்த பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருப்பதாக சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி 'ரூபவாஹினி' அறிவித்தது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதால் அவர்கள் கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் தாக்குதல் முயற்சிகளில் ஈடுபடக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதன் காரணமாகவே பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பாக சகல பொலீஸ் நிலையங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பிலும் ஏனைய பிரதேசங்களிலும் வீதிச் சோதனை அதிகரிக்கப்பட்டு உள்ளது. சந்தேகத்திற்கிடமான நபர்கள் பற்றிய தகவல்களைத் தந்துதவுமாறு பொதுமக்களை பொலீஸார் கேட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் தற்கொலைப் படைப்பிரிவைச் சேர்ந்த ஐந்து பேர் கொழும்பில் ஊடுருவியுள்ளதாக தகவல் கிடைத்துள்ளதால் சந்தேகத்திற்கு இடமான முறையில் நடந்து கொள்பவர்கள் குறித்து அவதானமாக இருக்குமாறு பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது— இவ்வாறு ரூபவாஹினி மேலும் அறிவித்தது. (உ-5)

# ஐ.தே.க. - தமிழ்கட்சிகள் பேச்சு ஒத்திவைப்பு!

கொழும்பு, மே 26

வடக்கு-கிழக்கு இணைப்பு தொடர்பாக ஆராய்வதற்காக தமிழ் - முஸ்லிம் கட்சிகளுக்கும், ஐ தே. கவுக்கும் இடையில் எதிர்வரும் 30ஆம் திகதி இடம்பெறவிருந்த சந்திப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ.பி டி.பி, புளொட், இ. தொ. கா, முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகளுக்கும், ஐ. தே. கவுக்கும் இடையில் முக்கிய விடயங்கள் குறித்து எதிர்வரும் 30 ஆம் திகதி பேச்சுக்கள் இடம்பெற விருந்தன ஆனால் அது தற்போது ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

எனினும் இப்பேச்சுக்கள் ஒத்திவைக்கப்பட்டமைக்கான காரணங்கள் குறித்து முரண்பாடான தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

ஐ.தே. கட்சியைச் சேர்ந்த முஸ்லிம் பிரமுகரான எம். எச். எம். மொஹமட் இணைப்புக் குறித்த பேச்சுக்களில் முக்கியமாக இடம்பெற வேண்டும் என்று ஐ தே. கட்சி கருதுவதாகவும் —

அவர் வெளிநாடு செல்வதால் அவர் திரும்பியபின் — ஜூன் 5 ஆம் திகதிக்குப் பின்பு — இப்பேச்சுக்களை நடத்தலாம் என்று ஐ தே.க. தமிழ்க் கட்சிகளுக்குத் தெரிவித்துள்ளது என்றும் —

'சண்டே லீடர்' தெரிவித்துள்ளது.

மே 30 ஆம் திகதிய பேச்சுக்களில் வடக்கு - கிழக்கு இணைப்புக் குறித்து பேசப்படவிருந்ததாகவும் —

இந்த நேரத்தில் இந்த விடயம் தொடர்பாகப் பேசி, சிங்கள மக்களின் எதிர்ப்பை ஏன் சம்பாதிக்க வேண்டும் என்று கருதியே ஐ.தே.கட்சி பேச்சை ஒத்திவைத்துள்ளது என்றும் —

'சண்டே ரைம்ஸ்' தெரிவித்துள்ளது. (உ-150-3)


இதோ வெளிவந்து விட்டது!

"நாமும் சுற்றாடலும்"

ஆண்டு 5

இது 1997 புதிய பாடத்திட்டத்துக்கு அமைவாக எழுதப்பட்டு வெளிவந்த முதலாவது நூலாகும். மேலும் புலமைப் பரிசில் மாணவர்களுக்கு அதிசிறந்த வழிகாட்டி நூல்.

வெளியீடு:

ஸ்ரீசுப்பிரமணிய புத்தகசாலை,

யாழ்ப்பாணம். (47169)


# மரண அறிவித்தல்

## திருமதி மேர்சி தேவமணி பரமானந்தன்

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், ஏழாலை தெற்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மேர்சி தேவமணி பரமானந்தன் கர்த்தருக்குள் நித்திரையடைந்துள்ளார்.

அன்னார் அ. பரமானந்தன் அவர்களின் அன்பு மனைவியும், எட்வேட் சஜனின் (பரி. யோவான் கல்லூரி) பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற த. சின்னத்துரை, தேவரட்ணம் தம்பதிகளின் அருமைப் புதல்வியும், காலஞ்சென்றவரான அரியநாயகம் அவர்களின் அன்பு மருமகளும், இராசதேவி, (சிங்கப்பூர்), செபரட்ணம் (திருகோணமலை), தேவகுமார் (மாலைதீவு), தேவநேசன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதி அடக்க ஆராதனை நாளை (27 - 05 - 97) செவ்வாய்க்கிழமை கொழும்பில் நடைபெறும். அன்று அன்னாரின் இல்லத்தில் பிற்பகல் 3. 00 மணிக்கு ஆராதனை நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தகவல்:
அ. பரமானந்தன்
(கணவர்)

நீதான் வளவு,
ஏழாலை தெற்கு,
சுன்னாகம்.

(சி/787)

## சமய நிகழ்வுகளில்

வடமராட்சி, மே 26

செம்பியன்பற்று புனித பிலிப்புநேரியார் ஆலய வருடாந்த திருநாள் நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு ஆரம்பமாகியது.

இன்று காலை 8 மணியளவில் நடைபெறும் திருச்சொரூப சுற்றுப் பிரகாரம், கூட்டுத்திருப்பலியுடன் திருநாள் நிறைவுபெறும். (ஐ-173)

## கப்பல் சேவை

யாழ்ப்பாணம், மே 26

காங்கேசன்துறையில் இருந்து திருகோணமலைக்கு "நியூகோ எண்டுரன்ஸ்" கப்பலில் இன்று பயணிகளை அழைத்துச் செல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

இன்று பயணம் செய்ய பெயர் பதிவு செய்தவர்களை இன்று காலை 7 மணிக்கு யாழ். ரயில் நிலையத்துக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளது. (உ-3)

## இணுவிலில் கல்விக் கண்காட்சி

வலிகாமம் தெற்கு, மே 26

இணுவில் மத்திய கல்லூரியில் எதிர்வரும் புதன், வியாழன் ஆகியநாள்களில் கல்விக் கண்காட்சி ஒன்று நடைபெற உள்ளது.

ஆண்டு ஒன்றுமுதல் ஆண்டு 11 வரை கற்றல் கற்பித்தல் அலகுகளுக்குரிய பொருள்கள் இக்கண்காட்சியில் இடம் பெறும்.

இவை ஆரம்பக்கல்வி, விஞ்ஞானம், சமூகக்கல்வி, கணிதம், விவசாயம், அழகியல் ஆகிய பாடத் துறைகளைச் சார்ந்தனவாக இருக்கும்.

யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப் பீடத்தலைவரும், கல்வியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி. சபா. ஜெயராசா முதல்நாள் கண்காட்சியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கண்காட்சியை திறந்துவைப்பார்.

இரண்டாம் நாள் கண்காட்சியில் உடுவில் கல்விக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ. வ. கணேசலிங்கம் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார். (ஐ - 152)

### தெரிவுக்குழுவுக்கு வெளியே

# தமிழ், முஸ்லிம் கட்சிகள் ஐ.தே. கவுடன் பேசுவது ஏன்?

## சீறுகிறது ஸ்ரீமானியின் கட்சி

இனப்பிரச்சினைக்கான தீர்வுகுறித்து தமிழ், முஸ்லிம் கட்சிகள் நாடாளுமன்ற தெரிவுக்குழுவுக்கு வெளியே ஐ. தே. கட்சியுடன் பேச்சுக்கள் நடத்தி வருவதை ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி கண்டித்துள்ளது.

அமைச்சர் ஸ்ரீமானி அத்துலத் முதலி தலைமையிலான இந்த முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரான ரவி கருணாநாயக்க நீதி அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸுக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் இக் கண்டனத்தைத் தெரிவித்துள்ளார்.

"அனைத்து விடயங்களையும் பகிரங்கமாகவே பேச வேண்டும். இரகசியமாகப் பேசுவது பல்வேறு ஊகங்களை எழுப்பக்கூடும்.

"சட்டப்படி அமைக்கப்பட்ட நாடாளுமன்ற தெரிவுக் குழு இருக்கும் போது, வெளியே என்ன விடயம் பேசப் போகிறார்கள்?" — என்று அவர் தமது கடிதத்தில் தெரிவித்துள்ளார். (உ-150-2)

## திருமலை பெறுபேறு

கடந்த டிசம்பர் மாதம் நடந்த ஜி சீ.ஈ. (சாதாரண) தரப் பரீட்சையில் திருகோணமலையில் ஐந்து மாணவர்கள் 8 பாடங்களிலும் அதிவிசேட ('டி') சித்தி பற்றுள்ளனர்.

செண். மேரீஸ் மகளிர் கல்லூரியில் இருவரும் —

ஸ்ரீ கோணேஸ்வர இந்துக் கல்லூரியில் ஒருவரும் —

விக்கினேஸ்வர ம. வியில் ஒருவரும் —

ஸ்ரீ சண்முகா மகளிர் கல்லூரியில் ஒருவரும் — எட்டு 'டி' பெற்றுள்ளனர்.

### அனுருத்த வழிபட வந்தபோது

# கண்டி தலதாமாளிகைக்குள் கத்தியுடன் நுழைய முயன்ற சிப்பாய்

கொழும்பு, மே 26

கண்டி தலதா மாளிகையில் வெசாக் வழிபாட்டில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை தமது பாரியாருடன் கலந்து கொண்டிருந்த சமயம் கிறீஸ்கத்தியுடன் தலதா மாளிகைக்குள் நுழைய முயன்ற இராணுவச் சிப்பாய் ஒருவர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டார்.

கண்டி தலதாமாளிகைக்கு முன்பாக உள்ள மகாமலுவ திடலில் வைத்து அங்கு வந்த சகலரும் பொலீஸாரால் சோதனை செய்யப்பட்டனர் என்றும் —

அச்சமயம் 6 அங்குல நீளமான கிறீஸ்கத்தி வைத்திருந்த ஒருவரைப் பொலீஸார் கைது செய்தனர் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட அந்த நபர் போயகலே இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவச் சிப்பாய் என பின்னர். தெரியவந்ததாகப் பொலீஸார் தெரிவித்தனர். அவர் தொடர்ந்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். (உ-150-3)

# இன்னும் சில தினங்களில் சாவகச்சேரிக்கு தொலைபேசி

சாவகச்சேரி, மே 26

சாவகச்சேரிக்கான தொலைபேசிச் சேவையை வழங்கும் பணிகள் இன்னும் ஒரு சில நாள்களில் பூர்த்தியடையும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தொலைத் தொடர்பு சேவைக்கான அன்ரனா அமைக்கும் பணிகள் பூர்த்தியடைந்துள்ளன.

தென் இந்திய திருச்சபை தேவாலயத்திற்கு அருகில் சுமார் 60 அடி உயரமான தொடர்பு கோபுரம் அமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் தபாலகத்துடனான தொலைபேசித் தொடர்புகளுக்கான வேலைகளும் இரண்டொரு தினங்களில் பூர்த்தியடையவுள்ளன. (ஐ-31)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் பிரசாரத்தின் இறுதி நாள்
# இந்தோனேசியாவில் பெரும் கலவரம்!
## 80 பேர் பலி! 100 பேர் காயம்!! கட்டடங்கள் நாசம்!!

ஜகார்த்தா, மே 26

இந்தோனேசியாவில் எதிர்வரும் வியாழனன்று நடைபெறவுள்ள தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகளின் இறுதிக்கட்டத்தில் நடந்த மிகமோசமான கலவரத்தில் சுமார் 80 பேர் பலியாகினர். நூற்றுக்கு மேற்பட்டோர் காயமடைந்தனர்.

தென்கலிமந்தான் (போர்ணியோ) மாகாணத்தின் தலைநகரில் வெடித்த இக்கலவரத்தின் போது அங்குள்ள அரசாங்கக்கட்டடங்கள் ஹொட்டல்கள், வங்கிகள், தேவாலயங்கள், கடைத் தொகுதிகள் என்பனவற்றுக்குப் பலத்த சேதம் ஏற்பட்டிருக்கிறது.

நகரின் நவீன சந்தைப்பகுதியில் இருந்து மட்டும் 60-க்கு மேற்பட்ட சடலங்கள் மீட்கப்பட்டிருப்பதாகப் பொலீசார் தெரிவித்தனர்.

காயமடைந்த பெரும் எண்ணிக்கையானோர் உள்ளூர் மருத்துவ மனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

ஆயிரக்கணக்கான ஆர்ப்பாட்டக்காரர்கள் வீதிகளில் திரண்டு கடைத் தொகுதிகளுக்குத் தீ வைத்தனர் என்றும்- தீயில் அகப்பட்டுப் பலர் கருகி மாண்டனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கலவரங்கள் மூண்டதை அடுத்து நகரில் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. பெரும் எண்ணிக்கையான துருப்பினர் அங்குகொண்டுவந்து குவிக்கப்பட்டனர்.

அங்கிருந்த பல தேவாலயங்களும் விகாரைகளும் கூட தாக்கிச் சேதப்படுத்தப்பட்டுள்ளன.

இந்தோனேசியாவின் சிறுபான்மை முஸ்லிம் கட்சியான ஐக்கிய அபிவிருத்திக் கட்சி ஆதரவாளர்களுக்கும், ஆளும் கோல்கர் கட்சி ஆதரவாளர்களுக்கும் இடையே கடந்த சில வாரங்களாக இடம் பெற்றுவந்த மோதல்கள் தற்போது தீவிரமடைந்துள்ளது. (ஐ)

## கண்ணிகள் அழிப்பு

மனித உயிர்களை அநியாயமாகப் பலியெடுக்கும் நிலக் கண்ணி வெடிகளை அழித்தொழிக்கும் நடவடிக்கையாக தென்னாபிரிக்கா அண்மையில் ஒரு தொகுதி கண்ணிவெடிகளை ஒன்றாக ஓரிடத்தில் சேர்த்து வைத்து வெடிக்கச் செய்து அவற்றை அழித்துள்ளது.

ஆபிரிக்காவிலேயே கண்ணி வெடிகளை ஒழிக்க முன்வந்துள்ள முதலாவது நாடு என்ற பெருமையை தென்னாபிரிக்கா பெற்றுள்ளது.

இந்தக்கண்ணிகள் வெடிக்க வைக்கப்பட்டபோது வானில் பலநூற்றுக் கணக்கான மீற்றர் உயரத்துக்கு திரண்டெழுந்த கரும்புகை மண்டலத்தை பெரும் எண்ணிக்கையானோர் வியப்புடன் கண்டு களித்தனர். (ஐ)

## வட ஆப்கானின் தலை நகரமும் தலிபான் வசம்!

காபூல், மே 26

வடக்கு ஆப்கானிஸ்தானின் தலைநகரமான மஸாரே ஷெரீபின் பெரும் பகுதிகளைத் தலிபான் மக்கள் படைகள் கைப்பற்றிவிட்டதாக அறிவிக்கப்படுகிறது.

ஆப்கானிஸ்தானில் தலிபானின் கட்டுப்பாட்டின் கீழ் வராமல் இருந்த கடைசி ஒரேயொரு பெரிய நகரம் மஸாரே ஷெரீப் ஆகும்.

ஜெனரல் டொஸ்தூமின் கூட்டுப்படைகள் அவரது கட்டுப்பாட்டில் இருந்து பிரிந்து முல்லா முகமது ஹுமார் தலைமையிலான தலிபான் மக்கள் படைகளுடன் இணைந்ததைத் தொடர்ந்து இந்த நகரம் தலிபான் படைகளிடம் வீழ்ச்சியடைந்தது.

அப்துல் மாலிக் தலைமையிலான டொஸ்தம் எதிர்ப்புக் கலகப் படைகள் இவ்வார முற்பகுதியில் தலிபான் படைகளுடன் இணைந்துகொண்டதும்—

ஆரம்பத்தில் ஜெனரல் டொஸ்தமுக்குஆதரவாகச் செயற்பட்ட வடமேற்கு பகுதி பார்கிஸ் மாகாண அதிகாரிகளும் கடைசி நேரத்தில் தலிபானின் பக்கம் சேர்ந்து கொண்டதும் தெரிந்ததே.

மஸாரே ஷெரீப் நகரின் வீழ்ச்சி குறித்து ரஷ்யா கவலை வெளியிட்டுள்ளது. இந்த நகரில் இருந்து 60 கிலோ மீற்றர் தொலைவில் எல்லையோரம் அமைந்துள்ள உஸ்பெகிஸ்தான் தென் பகுதிக்குள் அத்துமீறிப் பிரவேசிக்க முயலக் கூடாது என்று தலிபானை ரஷ்யா எச்சரித்திருக்கிறது. (ஐ)

## இன்னும் 2 ஆண்டில் கொங்கோவில் தேர்தல்!
### அதிபர் கபீலா அறிவிப்பு

கின்ஸாசா, மே 26

கொங்கோ ஜனநாயகக்குடியரசில் இன்னும் இரண்டு ஆண்டுகளுக்குள் ஜனநாயக ரீதியான பொதுத் தேர்தல் நடத்தப்படும் என்று அதிபர் லோறன் கபீலா தெரிவித்துள்ளார்.

ஜனநாயக ரீதியான தேர்தலுக்காக மக்களைத் தயார்ப்படுத்த வேண்டி உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த சில நாள்களின் பின்னர் தலைநகர் கின்ஸாசாவில் உள்ள மருத்துவமனை ஒன்றுக்கு கபீலா விஜயம் செய்தார். தலைநகர் கின்ஸாசாவுக்கு வருகை தந்த பின்னர் அவர் கலந்து கொண்ட முதலாவது பொது வைபவமாக அது அமைந்தது. (ஐ)

## பஞ்சாப் பொலீஸ் அதிகாரி ரயில் முன்பாய்ந்து தற்கொலை!

புதுடில்லி, மே 26

சீக்கியத் தீவிரவாதிகள் சிலரைக் கொலை செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டு விசாரிக்கப்பட்டு வந்த இந்திய பொலீஸ் அதிகாரி ஒருவர் ரயில் முன் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டார்.

சண்டிகருக்கு அருகே ரயில் ஒன்றின் முன்பாக அஜித் சிங் என்ற இந்தப் பொலீஸ் அதிகாரி திடீரெனப் பாய்ந்து தற்கொலை செய்ததாகவும் —

ரயில் பாதையின் அருகே அவரால் எழுதப்பட்ட கடிதம் ஒன்று கண்டெடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

1980 ஆம் ஆண்டுகளின் பிற்பகுதியில் பஞ்சாப் மாநிலத்தில் கலவரங்கள் மோசமடைந்திருந்த சமயம் நகர பொலீஸ் பொறுப்பதிகாரியாக இவர் பணிபுரிந்து வந்தார். (ஐ)

## பெருவெற்றி ஈட்டிய ஹாத்தமி ஈரானின் புதிய அதிபராகிறார்

தெஹ்ரான், மே 26

ஈரானிய அதிபர் தேர்தலில் பெரு வெற்றியீட்டிய முன்னாள் கலாசார அமைச்சர் முகமது ஹாத்தமி ஈரானின் ஐந்தாவது அதிபராகப் பதவியேற்கவுள்ளார்.

முகமது ஹாத்தமி இந்தத் தேர்தலில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை பெற்றுள்ளார்.

மொத்தம் மூன்று கோடி

**உலக அரங்கில்**

வாக்குகளில் ஹாத்தமி 2 கோடிக்கும் அதிகமானவாக்குகளைப் பெற்றுள்ளார்.

ஹாத்தமியின் எதிர்பாராத பெருவெற்றியை ஈரானிய தலைவர்கள் வாழ்த்தி வரவேற்றுள்ளனர்.

இவரை எதிர்த்து இஸ்லாமிய நிர்வாகத்தின் ஆதரவில் போட்டியிட்ட பழைமைவாத சார்புடைய முன்னாள் சபாநாயகர் அலி அக்பர் நாத்திக் நூரி தனது தோல்வியை ஒப்புக் கொண்டுள்ளார்.

மக்களின் தீர்ப்பை தாம் மகிழ்ச்சியுடன் ஏற்பதாக அவர் தெரிவித்தார்.

மிதவாதப் போக்குடையவரும் இடதுசாரிகளின் ஆதரவைப் பெற்றவருமான ஹாத்தமிக்கு ஈரானிய மக்கள் அமோக ஆதரவைஇத் தேர்தல் மூலம் வழங்கியுள்ளனர். ஈரானில் இவரது தேர்தல்வெற்றி பெரும் அரசியல் திருப்பம் என்று உலக அவதானிகள்குறிப்பிடுகின்றனர். (ஐ)

## அல்ஜீரியாவில் கார்க்குண்டு வெடிப்பு!

அல்ஜீரியாவின் தலைநகர் அல்ஜியர்ஸில் கார்க் குண்டு ஒன்று வெடித்ததில் 15 பேர் பலியாகினர், 31 பேர் காயமடைந்தனர்.

எதிர்வரும் ஜூன் மாதம் 5 ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலைச் சீர்குலைக்க முஸ்லிம் கெரில்லாக்கள் இத்தாக்குதல்களை நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

## இயக்குநர் இராமண்ணா காலமானார்

சென்னை, மே 26

தென் இந்தியாவின் பழம் பெரும் திரைப்பட இயக்குநரான ரி. ஆர். இராமண்ணா கடந்த வியாழன் இரவு சென்னையில் காலமானார். அவருக்கு வயது 72.

பாசம், குலேபகாவாலி, பறக்கும் பாவை, புதுமைப் பித்தன், தங்கச் சுரங்கம், கூண்டுக்கிளி போன்ற வெற்றிப் படங்களைஇவர் இயக்கியிருந்தார். (ஐ-4)

## பெரு அதிபர் இந்தியா விஜயம்

பெரு நாட்டு அதிபர் அல்பர்டோ பிஜிமோறி வியட்நாமுக்கான விஜயத்தை முடித்துக் கொண்டு இந்தியாவில் விஜயம் மேற்கொண்டுள்ளார்.

இந்திய முதலீடுகளை பெருவில் ஊக்குவிப்பது தொடர்பாக அவர் இந்திய அதிகாரிகளுடன் பேச்சு நடத்தவுள்ளார். (ஐ)

## தலைமைப் பொறுப்பை ஏற்க சோனியாவுக்கு கேசரி அழைப்பு

புதுடில்லி, மே 26

கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்குமாறு திருமதி சோனியா காந்திக்கு காங்கிரஸ் தலைவர் சீதாராம் கேசரி அழைப்பு விடுத்துள்ளார்.

இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியினதும், நாட்டினதும் ஐக்கியம், ஒருமைப்பாடு என்பவற்றைப் பேணுவதற்கு சோனியா காந்தி கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்பதே தற்போதைய உடனடித் தேவையாகும் என்றும் அவர் தெரிவித்தார்,

ராஜீவ்காந்தியின் ஆறாவது சிரார்த்த தினத்தை ஒட்டி இந்திய இளைஞர் காங்கிரஸினால் புதுடில்லியில் ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு வைபவத்தில் கேசரி உரையாற்றினார்.

''காங்கிரஸ் கட்சியின் எதிர்காலம் நேரு — காந்தி குடும்பத்தினரின் கைகளிலேயே உள்ளது'' என்று கேசரி தனது உரையில் கூறியபோது அங்கு பலத்த கரகோஷம் எழுந்தது.

''நாங்கள் எப்போதும் திருமதி சோனியா காந்தியின் வழிகாட்டுதலையும்ஆலோசனைகளையும் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறோம். இந்த இக்கட்டான காலகட்டத்தில் சோனியாகாந்தி கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற கட்சித் தொண்டர்களின் உணர்வை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது'' என்றும் கேசரி மேலும் தெரிவித்தார். (ஐ)

## எனது பெயரை, 'இமேஜை' வர்த்தகப் பண்டமாக்காதீர்கள்
### அன்னை தெரேஸா கூறுகிறார்

புதுடில்லி, மே 26

அன்னை தெரேஸாவின் உருவ அமைப்பில் பாண் ஒன்றை உருவமைத்து காட்சிக்கு வைத்திருந்த சிற்றுண்டிச் சாலை ஒன்றின் உரிமையாளருக்கு அவ்வாறு செய்ய வேண்டாம் எனக்கூறி அன்னை தெரேஸா கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

''எனது நோக்கத்தைவர்த்தகப் பண்டமாக்க வேண்டாம்'' என்று தமது கடிதத்தில் அன்னை தெரிவித்துள்ளார்.

''எனது பெயர், 'இமேஜ' அல்லது எனதுகுரல்இவற்றை 'வர்த்தக நோக்கத்துக்காகப் பயன் படுத்துவதை நான் வெறுக்கிறேன்'' என்றும் தெரேஸாகுறிப்பிட்டுள்ளார். (ஐ)

## பிரான்ஸில் நேற்று வாக்களிப்பு!

பாரிஸ், மே 26

பிரான்ஸில் பொதுத் தேர்தலின் முதற்கட்ட வாக்களிப்பு நேற்று நடைபெற்றது.

உரிய காலத்துக்கு 10 மாதங்களுக்கு முன்னராகவே நாடாளுமன்றத்தைக் கலைத்த அதிபர் ஷிராக்கின் மத்திய வலது சாரிக் கூட்டணிக்கு எதிராக இடது சாரிக்கட்சிகள் இந்தத் தேர்தலில் போட்டியிடுகின்றன.

527 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக பிரான்ஸ் மக்கள் இத்தேர்தலில் வாக்களிக்கவுள்ளனர்.

இரண்டாவது கட்ட வாக்களிப்பு எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை நடைபெறும். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவித்தல்
## யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

**பொன்னுராசா பூலோகசிங்கம்**
ஆனைக்கோட்டை வீதி, கொக்குவில் மேற்கு
**வழக்காளி**

**எதிர்**

**பூலோகசிங்கம் பெண் யோகேஸ்வரி**
இல. 05, அம்பலவாணர் வீதி, உடுவில் கிழக்கு, சுன்னாகம்.
**எதிராளி**

இத்தாற் சகலருமறிக மேற்படி வழக்காளி மேற்படி எதிராளிக்கு எதிராக வழக்காளிக்கும் எதிராளிக்கும் இடையேயுள்ள திருமணத்தை இரத்துச் செய்வதற்காக இம்மன்றில் மேற்படி வழக்கைத் தாக்கல் செய்துள்ளமையினால் இதில் அக்கறையுடைய எவரேனும் ஆட்சேபனை ஏதேனும் இருப்பின் 1997 ஆம் ஆண்டு ஆனி மாதம் 30 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ தமது ஆட்சேபனையை இம் மன்றில் நேரடியாக சமர்ப்பிக்குமாறு இவ்வறிவித்தல் தரப்படுகின்றது.

**1997 ஆம் ஆண்டு**
**வைகாசி மாதம் 20 ஆம் திகதி**
**நீதிமன்றக் கட்டளைப்படி**

வரைவு


**சி. வீரகத்திப்பிள்ளை**
சட்டத்தரணி
132, கச்சேரி-நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

**அண்ணா இராஜேந்திரம்**
பதிவாளர்
மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

(47145)

# 3 ஆம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு: 09 — 06 — 1934



உதிர்வு: 26 — 05 — 1994

## திருமதி திருநாவுக்கரசு திரவியம்

எங்கள் குடும்பத்தின் குல விளக்கே!
எமக்காக உயிர் வாழ்ந்த உத்தமியே!
மங்காத பாசமிகு மாணிக்கமே!
மனக்கோயில் உனக்காகப் பல இருக்க
மறைந்தாயோ நாம் வணங்கும் தெய்வமே!

என்றும் உங்கள் ஆத்ம சாந்திக்காக வெல்வில் முருகனை வேண்டி நிற்போம்.

கணவன், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரிகள்.

முருகமூர்த்தி வீதி,
சங்கானை.

(47090)

# 45 ஆம் நாள் நினைவலைகள்

மலர்வு: 24 — 01 — 1933



உதிர்வு: 12 — 04 — 1997

## அமரர் வேலுப்பிள்ளை சிவஞானம்

(இயக்குநர் M. S. Industries, கோண்டாவில்)

அவர்களை இந்நாளில் நினைவு கூருவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

இ. மோகன்குமாரும்,
சக ஊழியர்களும்.

M. S. Industries,
கோண்டாவில்.

(47157)

## பாலர் ஆசிரியர் சுகாதார கருத்தரங்கு

தென்மராட்சி. மே 26

சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களமும் சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கமும் இணைந்து தென்மராட்சிப் பகுதி பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கு ஏற்பாடு செய்துள்ள சுகாதாரக் கருத்தரங்கு எதிர்வரும் வியாழக்கிழமை சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் சாவகச்சேரி நகரப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தி. கிளிண்டஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கருத்தரங்கில் ''குழந்தை வளர்ச்சியும் நிறை அளவிடுதலும்'' என்னும் தலைப்பில் சாவகச்சேரி மேற்பார்வை குடும்ப நல சேவையாளர் செல்வி பாலாம்பிகையும்—

''பள்ளி முன்னிலைப் பிள்ளைகளிடையே கூடுதலாகக் காணப்படும் தொற்று நோய்' என்னும் தலைப்பில் யாழ். பிராந்திய சுகாதாரக் கல்வி அலுவலர் திரு. இராசேந்திராவும்—

''பல் சுகாதாரம்'' என்னும் தலைப்பில் யாழ். பிராந்திய பல் வைத்திய அதிகாரி டாக்டர் செல்வி உ. சிவபாதசுந்தரமும்- உரையாற்றுவர்.

(ஐ - 117)

## பாம்பு தீண்டியவர் ஆஸ்பத்திரியில்

தென்மராட்சி, மே 26

குவிக்கப்பட்டிருந்த பனை மட்டைகளை எடுத்த யுவதி ஒருவர் அதற்குள் இருந்த பாம்பினால் கடியுண்ட சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை மீசாலை மேற்கில் இடம் பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த இ. வனஜாதேவி (வயது 27) என்பவரே பாம்பினால் கடியுண்ட நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(ஐ-117)

## தமிழ்த்தின விழா

சாவகச்சேரி, மே 26

கைதடி முத்துக் குமாரசுவாமி மகாவித்தியாலயத்தில் தமிழ்த்தின விழா கடந்த வெள்ளியன்று அதிபர் எஸ். பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சிக் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் கே. கைலைநாதனும், சிறப்பு விருந்தினராக எஸ். சத்தியநாதனும் கலந்து கொண்டனர்.

(ஐ-31)

## விவசாயிகள் விவரப் பட்டியல்

யாழ்ப்பாணம், மே 26

நவாலி விவசாய சம்மேளனத்தினால் இடம் பெயர்ந்த விவசாயிகளுக்கு உள்ளீடு வழங்குவதற்கான விவரப் பட்டியல்கள் திரட்டப்பட்டு உடுவில் கமநல சேவைத் திணைக்கள பெரும்பாக உத்தியோகத்தருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதில் இடம் பெயர்ந்த விவசாயிகளது நிலங்கள் பற்றிய விவரங்களே திரட்டப் பட்டுள்ளன. (ஐ-15)

## குப்பி விளக்கு தவறி வீழ்ந்து தீ விபத்து

இரவு வீட்டில் கதைத்துக் கொண்டிருந்த வேளை அருகில் இருந்த குப்பிவிளக்கு தட்டுப்பட்டு சாரத்தில் தீப்பற்றி எரிந்ததில் ஒருவர் படுகாயமடைந்தார்.

பாஷையூரில் கடந்த வெள்ளியன்று இடம்பெற்ற இச் சம்பவத்தில் ஜேம்ஸ் விஜயகுமார் (வயது 44) என்பவரே காயமடைந்தவராவார். இவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். (ஐ-15)

# திருமறைக் கலாமன்றம்
## CENTRE FOR PERFORMING ARTS
# கருத்தரங்கு

பொருள்; நெருக்கீடு (STRESS)
காலம்: 28 - 05 - 1997 (புதன்)
புதிய நேரம் மாலை 4-30
இடம்: திருமறைக் கலாமன்ற கேட்போர் கூடம்
வழங்குபவர்: திரு. க. வி. கந்தவேள்
அவர்கள்
(அங்கீகாரம் பெற்ற அரச மொழி பெயர்ப்பாளர்)


ஆர்வலர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**திருமறைக் கலாமன்றம்**
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-785)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்: 18 — 07 — 1911



மறைவு: 26 — 04 — 1997

## அமரர் முத்தையா சங்கரபாலசூரியர்

எமது குடும்பத்தலைவர் உலகவாழ்வை நீத்தவேளை உடன் வந்து இறுதி மரியாதை செலுத்தியும் துயரில் ஆறுதலளித்தும், அவர் நோயுற்றிருந்த வேளை சிகிச்சைக்குதவிய யாழ். போதனா வைத்தியசாலை டாக்டர்கள், ஊழியர்கள், மற்றும் வேறு வழிகளிலும் உதவி புரிந்த அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.


பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தகவல்:
ச. சசிபாலசூரியர்
(மகன்)
26, காட்டுக் கந்தோர் ஒழுங்கை,
சுண்டுக்குளி யாழ்ப்பாணம்.

(47136)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு: 15 — 08 — 1940



உதிர்வு: 26 — 04 — 1997

## கணபதி இராசையா

(ஓய்வு பெற்ற ஊழியர், இ. மி. ச.)

பொறுமையுள்ள துணைவனாய் - தூய
அன்புமிக்க நல்ல கணவனாய்
பாசம் நிறைந்த தந்தையாய் - நல்ல
பரிவு காட்டிய தெய்வமே!
எங்கு சென்றுவிட்டீர் - எங்கள்
பண்புமிக்க தந்தையே!
நேசமுள்ள உங்கள் முகம் - எங்கள்
நெஞ்சைவிட்டு அகலாதையா.

இவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (26 - 05 - 97) இணுவில் தற்காலிக இல்லத்தில் நடைபெறும். இதில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு மிகவும் அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்.

நிரந்தர முகவரி:-
குளமன்கால், மல்லாகம்.

(47243)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பில் சிகிச்சைக்குச் செல்லும் புற்றுநோயாளருக்கு பண உதவி

யாழ்ப்பாணம், மே 26

குடாநாட்டில் இருந்து மேலதிக சிகிச்சைக்காகக் கொழும்புக்குச் செல்லும் புற்றுநோயாளர்களுக்கு அவர்களது நிலையைப் பொறுத்து பண உதவி வழங்கப்படுவதாக வடக்கு-கிழக்கு புற்றுநோய் உதவி நிறுவனம் (CANE) தெரிவித்துள்ளது.

வடக்கு — கிழக்கு புற்றுநோய் உதவி நிறுவனம் கடந்த 96 ஆம் ஆண்டு யாழ். ஆஸ்பத்திரி பணிப்பாளர் வைத்திய கலாநிதி செல்வி ந. கனகரட்ணம் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது. தற்போது அது யாழ். ஆஸ்பத்திரியில் இயங்கி வருகிறது.

புற்று நோயாளர்களுக்கான சேவையை விரிவுபடுத்த நலன்விரும்பிகளின் உதவியை தமது நிறுவனம் எதிர்பார்த்துள்ளதாகவும் —

உதவிகளை வழங்க விரும்புவோர் யாழ். போதனா வைத்திய சாலையில் தொடர்பு கொள்ளலாம் என்றும் நிறுவனத்தின் செயலாளர் தெரிவித்தார்.

வடக்கு — கிழக்கு புற்றுநோய் உதவிச் சங்கத்தின் நோக்கங்கள் பின்வருமாறு:-

★ புற்றுநோயாளர்களுக்கு உதவி புரிதல்.

★ உதவி கோரும், உதவி தேவைப்படும், சிபார்சு செய்யப்படும் நோயாளிகளுக்கு உதவி செய்தல்.

★ கொழும்பில் சிகிச்சை பெறச் செல்வோருக்கு பிரயாண உதவிப் பண உதவி, இட வசதி மருத்துவ உதவி ஆகியனவற்றை வழங்கல்.

★ நோயாளர்கள் தங்கி நின்று சிகிச்சை பெறுவதற்கான வசதிகள், ஒழுங்குகள் செய்தல்.

★ இவ்விடமுள்ள நோயாளருக்கு சிகிச்சை நிலையம் ஒன்றை அமைக்க ஆவன செய்தல். (ஐ)

# யுத்தத்தை உடன் நிறுத்துமாறு கூட்டணி ஜனாதிபதியிடம் கோரும்

திருகோணமலை, மே 26

தற்போதைய யுத்தத்தை உடன் நிறுத்திவிட்டு சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்குமாறு தமிழர் விடுதலைக் கூட்டணித் தூதுக்குழு ஜனாதிபதியை நேரில் சந்தித்து வலியுறுத்தவுள்ளது.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை ஜனாதிபதியைச் சந்திக்கவுள்ள கூட்டணித் தூதுக்குழு யுத்தத்தை நிறுத்துமாறு வலியுறுத்தும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகமும், முன்னாள் திருமலை மாவட்ட எம். பியுமான இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்கு யுத்தத்தின் மூலம் தீர்வு காண முடியாது என்பதை விடுதலைப் புலிகளும், அரசும் பல தடவைகள் ஏற்றுக், கொண்டுள்ளனர்.

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் தீர்வு ஒன்றைக் காண்பதற்கான தற்போதைய சூழ்நிலையை நழுவவிடாது உடனடியாக சமாதான முயற்சிகளை ஆரம்பிக்க வேண்டும் என்று அரசிடம் தாம் கோரவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# குருநகர்ப் பகுதி மின் விநியோகம் சீரின்றி உள்ளதாக முறைப்பாடு

குருநகர், மே 26

குருநகர் றெக்கிளமேசன் மத்திய கிழக்கு வீதிப் பகுதிகளுக்கான மின் விநியோகம் சீரின்றி இருப்பதாக பாவனையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மட்டுப்படுத்தப்பட்ட மின் விநியோகம் வலுக்குறைந்ததாகவும், சீரின்றியும் கிடைப்பதாக அவர்கள் கூறுகின்றனர்.

இப் பகுதிகளில் மின் இணைப்புகள் சீரின்றி இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மின் இணைப்புகளைச் சரிசெய்து சீரான மின் விநியோகத்தை வழங்க உதவுமாறு கோரி றெக்கிளமேசன் சனசமூக நிலையத்தினர் யாழ். மின்சாரசபை அத்தியட்சகரிடம் மகஜர் ஒன்றை கையளித்துள்ளனர். (ஐ-51)

# முகமாலை தும்பு ஆலை மீண்டும் இயங்கும்

தென்மராட்சி, மே 26

கடந்த ஒருவருட காலமாக மூடப்பட்டிருந்த முகமாலை தும்பு ஆலையை மீண்டும் இயங்கவைப்பதற்கு பளை பிரஜைகள் குழு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இத் தும்பு ஆலையை இயக்குவதற்கு இப் பகுதியில் உள்ள அரச கூட்டுறவு நிறுவனங்கள் முன்வரும் பட்சத்தில் அடுத்த மாதமளவில் ஆலையை இயங்க வைக்க முடியுமெனத் தெரிவிக்கப்பட்டது.

முன்னர் தும்பு ஆலையில் பணியாற்றி அனுபவம் உள்ளவர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கவுள்ளதால் அனுபவம் உள்ளவர்கள் முகமாலை கிராம அலுவலர் வே. வன்னியசிங்கத்திடம் அல்லது பளை பிரஜைகள் குழு அலுவலகத்தில் தங்களது அனுபவச் சான்றிதழ்களை சமர்ப்பித்து பெயர்களைப் பதிவு செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இத் தும்பு ஆலை இயங்க ஆரம்பித்ததும் யாழ். மாவட்டத்தில் தற்போது இயங்காமல் மூடப்பட்டுள்ள தும்புக் கைத்தொழில் நிலையங்கள் மீண்டும் ஆரம்பிக்கப்படலாமெனவும் இதனால் நூற்றுக்கணக்கானோர் வேலை வாய்ப்புப் பெறலாமெனவும் பிரஜைகள் குழுத் தலைவர் ஏ. ஆர். முனீஸ் துரைசிங்கம் தெரிவித்தார்.

முன்னர் இத்த ஆலையில் 330 பேர் கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் இவ் ஆலையுடன் கிடுபின்னும் தொழிற்சாலையும் இயங்கவுள்ளது. (ஐ-117)

## தென்மராட்சிப் பகுதியில்

# மூன்று மாத காலத்தில் 5 பேருக்கு காச நோய்

தென்மராட்சி, மே 26

இந்த ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் தென்மராட்சிப் பிரதேசத்தில் காச நோயினால் ஐவரும், 96 பேர் வயிற்றுளைவினாலும், 30 பேர் நெருப்புக் காய்ச்சலினாலும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் செங்கண்மாரியினால் 12 பேரும் பாதிக்கப்பட்டுள்ளதாக சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக புள்ளி விவரங்கள் தெரிவித்தன.

ஜனவரி, பெப்ரவரி ஆகிய மாதங்களில் வயிற்றுளைவு, நெருப்புக் காய்ச்சல் ஆகியவற்றால் அதிகமானோர் பாதிக்கப்பட்ட போதிலும் பின்னர் தற்போது இந்நோய்கள் குறைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

# மக்கள் கடை திறக்க ஏற்பாடு

நெடுந்தீவு, மே 26

நெடுந்தீவு கிழக்கு தீர்த்தக்கரை, தொட்டாரம் ஆகிய பகுதிகளில் வதியும் மக்களின் வசதிக்காக நெடுந்தீவு ப. நோ. கூ. சங்கம் மக்கள் கடை ஒன்றை அப் பகுதியில் திறக்கவுள்ளது என்று சங்கத்தின் பொதுமுகாமையாளர் இரா. தர்மலிங்கம் தெரிவித்தார். (ஐ-111)

# மறைச்சுடர் சஞ்சிகை

நெடுந்தீவு, மே 26

நெடுந்தீவு கத்தோலிக்க ஆசிரியர் சங்கம் ''மறைச்சுடர்'' என்னும் காலாண்டு சஞ்சிகையை விரைவில் வெளியிடவுள்ளது. (ஐ-111)

# முன்பள்ளிகள் நன்கு பயிற்சி பெற்ற ஆசிரியரால் திட்டமிட்டு நடத்தப்பட வேண்டியது அவசியம்

## கருத்தரங்கில் வலியுறுத்து

திருநெல்வேலி. மே 26

''முன்பள்ளிகள் அடிப்படை வசதிகளுடன் நன்கு பயிற்சி பெற்ற ஆசிரியர்களினால் நடத்தப்பட வேண்டியது மிகவும் அவசியமானது. பல்கலைக்கழக மாணவருக்குக் கற்பிப்பதிலும் பார்க்க முன்பள்ளிகளில் சிறுவர் பாடசாலைகளில் — ஐந்து வயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்கு- கற்பிப்பது கஷ்டமான பணி, பெற்றோர்கள், ஆசிரியர்கள் ஆகியோரின் வழி நடத்துதலினால் எமது சிறார்களின் கல்வி, ஒழுக்கம் என்பன மேம்பாடு பெற முடியும்''

யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் நடத்திய முன்பள்ளி (பாலர் பள்ளி) அபிவிருத்தி பற்றிய கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் (நந்தி) இவ்வாறு குறிப்பிட்டார்.

இணையத் தலைவர் சு. பரமநாதன் தலைமையில் கடந்த வியாழக்கிழமை நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் பெரும் எண்ணிக்கையான முன்பள்ளி ஆசிரியர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதி நிதிகள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் செயலாளர் திரு. அ. சி. சிவசுப்பிரமணியம் வரவேற்புரை நிகழ்த்தினார். நல்லை குரு மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், வண. பிதா எஸ். பி. நேசகுமார் அடிகளார், வண. பிதா செல்வராசா அடிகளார் ஆகியோர் ஆசியுரை வழங்கினார்கள்.

பேராசிரியர் சிவஞானசுந்தரம் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

ஒருகுழந்தையானது பிறந்தவுடன் மருத்துவமாது எனப்படும் குடும்பநல சேவையாளரின் கண்காணிப்பில் நோய்த் தடுப்பு, போஷாக்கு என்பன அவதானிக்கப்படுறது. அதனைத் தொடர்ந்து முன்பள்ளி (பாலர் பாடசாலை) ஆசிரியைகளிடம் அக்குழந்தை ஒப்படைக்கப்படுகின்றது. சரியான தகுதி வாய்ந்த முன்பள்ளி ஆசிரியர் இல்லாது விட்டால் முன்பள்ளி ஆசிரியர்களிடம் குழந்தையை ஒப்படைப்பதில் பிரயோசனம் இல்லை. மேலை நாடுகளில் முன்பள்ளி செல்லும் பிள்ளைகள் கொம்பியூட்டரில் பார்த்து படிக்கும் நிலையுள்ளது. ஆனால் எமது பிராந்தியத்தில் நவீன வசதிகள் எதுவும் அவர்களுக்கு கற்பிக்க இல்லாதிருக்கிறது. முன்பள்ளிகளுக்கென பாடவிதான குழு விதந்துரைகளைச்செய்து அதன் மூலமே எல்லா இடங்களிலும் கற்பிக்கப்பட வேண்டும்—என்றார்.

யாழ் கல்விப் பணிப்பாளர் சு. இரத்தினராசா உரையாற்றுகையில்:-

ஆறுமுகநாவலர் அவர்களே அக்காலத்தில் முன்பள்ளி நடத்தியவர் என்பதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஒரு பிள்ளையை உருவாக்கி சமுதாயத்துக்கு விட வேண்டிய முக்கிய பொறுப்பு ஆசிரியர்களையே சார்ந்தது. ஆசிரியர்களுக்குத் தகுந்த பயிற்சியும், வேதனமும் வழங்கப்பட வேண்டியது அவசியம். யாழ். மாவட்டத்தில் தொண்டர் ஆசிரியர்களாக சுமார் 750 பேர் வேதனம் எதுவும் பெறாது சேவையாற்றுகின்றார்கள். மாணவ சமுதாயத்தை நற்பிரஜைகளாக உருவாக்கும் பெரும் பொறுப்பு ஆசிரியர்களிடம் இருப்பினும் அவர்களுக்குக் கொடுக்கப்படும் மதிப்பு குறைந்து வருவதைக் காண எமக்கு மிகவும் கவலையாக - வேதனையாக இருக்கிறது — என்றார்.

''யுனெஸ்கோ'' கல்வி இணைப்பாளர் கோ. சி. வேலாயுதம் அங்கு உரையாற்றுகையில்-

முன் பள்ளி ஆசிரியர்கள் வார்த்தைகளில் வாழ்ந்த காலம் மாறி செயலளவில் இயங்கவேண்டிய காலம் வந்துவிட்டது. முன் பள்ளிகளில் படிப்பு, பாட்டு. விளையாட்டு என்ற முக்கிய அடிப்படை அம்சங்கள் வர இடம்பெற்றால் மட்டுமே தற்போதைய நிலையில் பயனுள்ளனவையாக இருக்கும். காலத்திற்கேற்ற வகையில் மகிழ்ச்சியுடன் சிறார்களை அரவணைத்துச் செல்லக்கூடியவர்களாக ஆசிரியர்கள் இருக்கவேண்டும். முன் பள்ளி திட்டத்தில் பொருத்தப்பாடான- ஆக்க பூர்வமான முறையில் இட்டங்கள் இணைக்கப்பட வேண்டும்.

அண்மையில் கல்விச் சுற்றுலாவுக்குக் கதிர்காமம் சென்ற க. பொ. த. உயர் தரப் பரீட்சையில் நான்கு ''ஏ'' எடுத்த மாணவர் ஒருவர் அவர்களுடன் கூடச் சென்றஎம்மிடம் கதிரைமலையில் ஏறும்போது ''சேர் இது தானா இமயமலை?'' என்று என்னைக் கேட்டார். இதிலிருந்து பொது அறிவானது மாணவருக்கு எந்த அளவில் உள்ளது என்பதைக் கண்டு கொள்ளலாம். இந்தியாவில் உள்ள இமயமலை பற்றித் தெரியாத இவர்கள் நம் நாட்டிலுள்ள கதிரை மலையை இது இமயமலையா என்று கேட்கும் நிலையை அறிந்து வேதனைப்பட்டேன். பரீட்சையில் சித்தி பெறுவதற்கான கல்வியுடன் வாழ்க்கைக்கான கல்வியும் மாணவர்களுக்கு அவசியமானது- என்றார்.

யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர். இ. தெய்வேந்திரன் உரையாற்றுகையில்—

யாழ்.மாநகர சபைப் பகுதியில் முன்னர், 54பாலர் பாடசாலைகள் இயங்கி வந்தன, ''யூனிசெவ்'' நிறுவனத்தின் உதவியுடன் இவற்றுக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுத்தோம். காலத்தின் தேவையை முன்னிட்டு சிறார்களின் போஷாக்கு விடயத்தில் நாம் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. பிள்ளையின் வளர்ச்சியானது உளரீதியாகவும், உடல் ரீதியாகவும் இருக்கவேண்டும். கிறிஸ்தவ திருச்சபை போன்ற பல்வேறு அமைப்புகளும் இவ் விடயத்தில் உதவ முன்வந்துள்ளன —என்றார்

யாழ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த வைத்திய கலாநிதி சி. எஸ். நச்சினார்க்கினியன் உரையாற்றுகையில்— கூறியதாவது:—

''முன்பள்ளி ஆசிரியர்களின் பொறுப்புமகத்தானது வேலைக்கு எடுக்கும் போது சரியான தகுதியுள்ளவர்களை எடுக்கவேண்டும். பல அரசு சார்பற்ற நிறுவனங்கள் முன்பள்ளி தொடர்பான வேலைத் திட்டங்களுக்கு உதவுதற்கும், அபிவிருத்தி செய்வதற்கும் லட்சக்கணக்கான ரூபா நிதியை வழங்குவதற்குத் தயாராக இருக்கின்றன. ஆகவே இதுபற்றி நன்கு ஆராய்ந்து செயல் திட்டங்களை வகுக்க உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும். முன்பள்ளி ஆசிரியைகளுக்கு நிறுவனம் மூலம் பொறுப்பான பயிற்சியை வழங்கவேண்டியதும் முக்கியமானது—என்று கூறினார்.

யாழ்.மாநகரசபை ஆணையாளர் வே. பொ. பாலசிங்கம் உரையாற்றுகையில்— சபை நிர்வாகத்திடம் நிதி வளம் இல்லாமையால் இரண்டு பாலர் பாடசாலைகளை மட்டும் தற்போது நிர்வகித்து வருவதாகவும், எதிர்காலத்தில் வட்டாரத்திற்கு ஒன்று வீதம் பாடசாலையை நடத்தவிருப்பதாகவும் தெரிவித்தார்.

யாழ். செயலக திட்டப் பணிப்பாளர் கா. பாலகிருஷ்ணன், இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளைச் செயலாளர் பேராசிரியர் வி. கே, கணேசலிங்கம், யாழ். பல்கலைக் கழகசமூக மருத்துவத் துறைத்தலைவர் வைத்தியக் கலாநிதி ஆர்.சிவசங்கர் ஆகியோர் உட்படப் பலர் இக் கருத்தரங்கில் உரையாற்றினர்.

(ஐ-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### SPOKEN ENGLISH

சுலபமான முறையில் ஆங்கிலம் பயில ஆசிரியர் ந. விக்கினேஸ்வரன் ஆச்சாரி 426 (302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [47138]

இரு மாதங்களில்(வெளிநாடு செல்பவர்கட்கும்), O/L ஆங்கிலத்தில் Distinction, Credit பெறுபேறடைய ஆண்டு 9.10 உட்படக் கற்பிக்கப்படும். B Sc. ஆசிரியர், 85, சிவன்கோயிலடி, சிவன் கோயில் மேற்கு வீதி, திருநெல்வேலி. [47154]

### ஸ்ரீராமகிருஷ்ணவிஜயம்

வாசிப்பதால் பூரணமடைகிறான், மில்க்வைற் செய்தியும், வெளியீடுகளும் 5 சலவைத்தூள் பைக்கற் 5 சவர்க்கார உறைகள் கொடுத்து பெற்றுக்கொள்ளுங்கள்" 'ஸ்ரீராமகிருஷ்ண விஜயம். விலை ரூபா 20/- மில்க்வைற். [சி/778]

### வாடகைக்கு

யாழ். பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் மாணவிகளுக்கு (இருவருக்கு) பல்கலைக்கழகத்திற்கு அண்மையில் சகல வசதிகளுடன் அறை வாடைகைக்கு உண்டு. விவரங்களுக்கு காலை 8.30 மணிக்கு முன்னரும் மாலை 5.00 மணிக்கு பின்னரும் தொடர்பு கொள்ளவும். இல. 36,இராமநாதன் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் [47156]

யாழ் நகரில் கடையும், அறையும் தனித்தனியாக வாடகைக்குண்டு.தொடர்பு: ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426(302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் (47139)

### வகுப்புக்கள்

தட்டச்சு, சுருக்கெழுத்து (ஆங்கிலம்) வகுப்புக்கள் 30-05-97 வெள்ளி முதல் ஆரம்பமாகின்றன. Of Power Technology, பெரிய அரசடி, Instituion சாவகச்சேரி, [46159]

தலை அலங்காரம், பூவேலை, தையல், ஐசிங் வகுப்புக்கள் 14-6-97 பிற்பகல் 2.00 மணிக்கு ஆரம்பமகின்றன. P. சுவர்ணசிறி, அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி, சான்றிதழ்கள் வழங்கப்படும். [47150]

### நாடகம் எழுதுவது எப்படி.

50 ரூபாவுடன் நாடகம் பற்றிய பலவிடயங்களை அறிந்து கொள்ளலாம் நாடகத்துறையில் ஈடுபட்டுள்ள எல்லோரும் வாசித்துப் பயனடையக்கூடிய நூல். 250 நாடகங்கள் எழுதிய அராலியூர் சுந்தரம்பிள்ளை எழுதியது [47016]

### மணமகன் தேவை

இந்து, சைவபோசன, சௌரவ குடும்பம், 45வயது இளந்தோற்ற, குற்றமற்ற குறிப்புடைய, அழகான, அரசாங்கஉத்தியோகமுடைய மணமாகாத பெண்ணுக்கு தகுந்த மணமகன் தேவை. ''சேவைநம்பகம்'' விவாக சேவை, வைமன் வீதி, நல்லூர். (47171)

### பயிற்சி நெறிகள்

Diploma In Electrical Technecian மோட்டார் டைனமோ மீளமுறுக்குதல் (Winding) மின்னிணைப்பு, றேடியோ, எலக்றோனிக் வகுப்புகள் 4-6-96 புதன் கிழமை ஆரம்பமகின்றன. Institution Of Power Technology, பெரிய அரசடி சாவகச்சேரி. [47160]

### தவறிவிட்டது

சாவகச்சேரி மகளிர் கல்லூரி மாணவியான இராமநாதன் மஞ்சுளா (சரசாலை வடக்கு) என்பவரது விசேட அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் ஒப்படைக்குமாறு வேண்டுகின்றோம். (சி-782)

### புலமைப் பரிசில்

மே 25, ஜூன் 8,15,22,29 வாரமொரு பரீட்சை வினாத்தாள் I, வினாத்தாள் II விடைத்தாளுடன் விலை ரூ. 10/-. ஆண்டு 3, 4 மாதாந்தப் பரீட்சை வினாத்தாள்களும் கிடைக்குமிடம்: சிவசக்தி புத்தகசாலை அன்ஸ்ரோர்ஸ், டச்சு வீதி, சாவகச்சேரி. (சி/783)

### குத்தகைக்கு

எழுதுமட்டுவாழ் ஒட்டுவெளியில் கருந்தளிப் பகுதியிலுள்ள 25 பரப்பு நெற்காணியும் சிவன் கோயிலுக்கு அருகிலுள்ள 18 பரப்பு நெற்காணியும் இவ்வருடம் (1997) காலபோக நெற் செய்கைக்கு குத்தகைக்கு கொடுக்கப்படவுள்ளது. தொடர்பு; தி. அமிர்தலிங்கம். ஆசிரியர் ஒட்டுவெளி. (சி-784)

### விற்பனைக்கு

புதிய ஒட்டோவும், ஒற்றை மாட்டு வண்டிலும் விற்பனைக்கு உண்டு. (M-A-M) மாரியம்மன் மோட்டோர்ஸ் கோப்பாய். (47170)

### கடை வாடகைக்கு

403, மணிக்கூட்டு வீதியில் கடை வாடகைக்கு கொடுக்கப்படும். விவரங்களுக்கு, செ. மகாலிங்கம் 7, யாழ். வீதி, பலாலி றோட், யாழ்ப்பாணம். (47172)

## வைத்தியம்

செங்கமாரி, அல்சர், ஆஸ்துமா,வாதநோய்கள், வலிப்பு நோய், பீநிசம், தலையிடி, தலைகாலவியல், சருமநோய்கள், மாதவிடாய்க்குத்து, இரத்தப் போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, குழந்தை வைத்தியம், வீரியக் குறைவு, மூல வியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர்; சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர்:

வேலணை
வைத்திய கலாநிதி,
**சி. இராசரத்தினம்**
121, 2ஆம்குறுக்குத்தெரு.
யாழ்ப்பாணம்.
(46815)

## ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்

**பருத்தித்துறை**

## சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜய நூற்றாண்டு

கருத்தரங்கு

**தலைவர்:** திரு. சு. இரத்தினராசா அவர்கள் (கல்விப்பணிப்பாளர், வலயம் 01)

**விடயம்:** சுவாமி விவேகானந்தரின் கல்விச் சிந்தனைகள்.

**இடம்** : யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி.
**திகதி** : 31 - 05 - 97 சனிக்கிழமை.
**நேரம்** : முற்பகல் 9. 00மணி தொடக்கம் பிற்பகல் 2. 30 வரை (பழைய நேரம்)

**முக்கிய குறிப்பு:** முன்கூட்டிப் பதிவு செய்தவர்கள் மட்டும் பங்கு பற்றலாம்.

(சி/774)

## 45 ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி

### வேலுப்பிள்ளை தில்லைநாதர்

மறவன்புலோவைச் சேர்ந்தவரும், மறவன்புலோ கிராம அலுவலர்
**தி. மகாலிங்கம்**
அவர்களின் பாசமிகு தந்தையாருமான
**அமரர் வேலுப்பிள்ளை தில்லைநாதர்**

அவர்கள் கடந்த 12-04-97 அன்று இயற்கை எய்தியதையிட்டு அன்னாரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலக ஊழியர்
நலன்புரிச் சங்க அங்கத்தவர்கள்

பிரதேச செயலகம்,
தென்மராட்சி,
சாவகச்சேரி.
(சி/759)

## ஓராண்டு இதய அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
**செல்வி எம். சுவாம்பிள்ளை**
அவர்களின் தந்தை
### நீக்கிலாப்பிள்ளை சுவாம்பிள்ளை

அவர்கள் அமரத்துவமடைந்த ஓராண்டு நிறைவுறும் இந்நாளில் (26-05-97) அவரது ஆன்ம சாந்திக்காவும், அன்னாரின் குடும்பத்தினரது மனச்சாந்திக்காகவும் இறைவனை இறைஞ்சுகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
யா/ இளவாலை [illegible]
(47141)


## விசேட பொதுக்கூட்டம்

அனைத்துப் பல்கலைக்கழக தொழிற்சங்கங்களின் சம்மேளன வேலை நிறுத்தப் போராட்டம் பற்றிய விசேட பொதுக்கூட்டம் இன்று திங்கள் காலை 8.30 மணியளவில் கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

சகல போதனை சாரா ஊழியர்களையும் தவறாது சமுகந்தருமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

**சி. தங்கராஜா**
இணைச் செயலாளர்,
பல்கலைக்கழக ஊழியர் சங்கம்,
யாழ். பல்கலைக்கழகம்.
(47173)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 24 — 05 — 1953
உதிர்வு: 26 — 04 — 1997

### அமரர் ஞானப்பிரகாசம் வின்சன்

(உயரபபுலம், ஆனைக்கோட்டை)

எப்போ முடிந்த முடிவின் படியே யாகும்
அப்பன் வதித்த விதி அப்படியே இப்பாரில்
எல்லோர்க்கும் உண்டாம்.
இறப்பே நியதியாம் நல்லோராய் வாழ்தல் நலம்.

ஞா. அலெக்ஸாண்டர் (அண்ணா)
சு. நந்தகுமார் (மகன்)

60, சிவன் வீதி,
திருநெல்வேலி.
(47158)

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் க. லம்போதரன்

(ஓய்வுபெற்ற அரச கணக்காளர்)

தோற்றம்: 08 — 11 — 1931
மறைவு: 21 — 05 — 1992

**திதி: 26 - 05 - 97**

விநாயகப் பெருமானையும் வீரபத்திரரையும்
சிந்தையிலிருத்தி
நேர்மையையும் உண்மையையும் தெய்வ வழிபாடு
என நம்பி
பாசத்தோடும் புரிந்துணர்வோடும் வழிகாட்டிய
உத்தமர்
என்றும் எங்கள் காவல் தெய்வமாய் இருக்க
பிரார்த்திக்கும்!

**குடும்பம்**

மீசாலை.

126/4, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.
(47009)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## ஆசிரியர் பயிற்சி

யாழ்ப்பாணத்தில் இப்போது பலாலி, கோப்பாய் என்று இரண்டே இரண்டு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளே இயங்குகின்றன. வவுனியாவில் சமீபத்தில் நிறுவப்பட்ட கல்விக் கல்லூரி ஒன்று இயங்குகிறது. ஆசிரியர்களைப் பயிற்றுவிப்பதற்கென வடமாகாணத்தில் ஆக மொத்தம் மூன்று கலாசாலைகளே உள்ளன.

சுமார் இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாண மாவட்டத்தில் மட்டும் ஐந்து ஆசிரியர் கலாசாலைகள் செயற்பட்டன. அவற்றில் மூன்று அடுத்தடுத்து மூடப்பட்டன. அதன் பின்னர் யாழ்ப்பாணத்தில் ஆசிரியர் கலாசாலைகள் எதனையும் நிறுவ அரசு முனையவில்லை. அதற்குப் பதிலாக இப்போது இயங்கும் இரண்டு கலாசாலைகளையும் ஒன்றாக இணைக்கக் கல்வி அமைச்சு உள்ளூரத் திட்டமிட்டது.

இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னர் இருந்த மாணவர்களுடன் ஒப்பிடும் போது, இப்போது மாணவர் எண்ணிக்கை சுமார் பத்து மடங்காவது பெருகியிருக்கும். அவர்களுக்குக் கல்வி புகட்டுவதற்கு ஆசிரியர்களும் அதிக எண்ணிக்கையில் தேவைப்படுகிறார்கள்.

ஆனால் வடக்கில் மட்டுமன்றி கிழக்கிலும் பொதுவாக ஆசிரியர்களுக்கும், குறிப்பாக பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கும் மிகமிகப் பெரிய அளவில் பற்றாக்குறை நிலவுகிறது. இது இன்று நேற்று உண்டான குறைபாடல்ல. சுமார் பத்துப் பதினைந்து வருடங்களாகவே ஆசிரியர் ஆளணி பற்றாக்குறை தமிழ்ப்பிரதேச மாணவர்களின் கல்வி வீழ்ச்சிக்கு மிகப் பிரதான காரணியாகி உள்ளது. இது குறித்து அரசுகள் பெரிதாக அலட்டிக் கொண்டதாக இல்லை.

இப்போது, யாழ்ப்பாணத்தில் புனரமைப்பு, புனர்வாழ்வுத் திட்டங்கள் என்று பெரிதாக பேசப்பட்டாலும், பிரசாரம் செய்யப்பட்டாலும் ஆசிரியர் நியமனங்கள், ஆசிரியர் பயிற்சி குறித்துக் குறிப்பிட்டுக் கூறக் கூடிய அளவுக்குச் செயலளவில் எதுவும் நடைபெறவில்லை. அகில இலங்கை ரீதியில் ஒப்பீட்டளவில் நோக்கும் போது, தமிழ்ப்பகுதிகளுக்கு — வடக்குக்கு — கஞ்சிக்குப் பயறுபோட்ட நிலை தான்!

தமிழர்கள் கல்வியை மிகப் பெருஞ்செல்வமாக மதிப்பவர்கள். பிச்சை புகினும் கற்கை நன்றே என்று கல்வி அறிவைப் பெறுவதிலும் தமது பிள்ளைகளுக்கு ஊட்டுவதிலும் முன்னிற்பவர்கள். ஆனால் தமிழ் மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கு எல்லா வகைகளாலும் குந்தகமும் குறுக்கீடுகளுமே இருந்து வருகின்றன.

யாழ்ப்பாணத்தில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களை உருவாக்குவதற்கு மேலும் சில கல்விக் கல்லூரிகள் நிறுவப்பட வேண்டியதன் அவசியத்தை யாழ். பல்கலைக்கழகத் துணை வேந்தர் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை சமீபத்தில் வலியுறுத்தி உள்ளார். இது குறித்துக் கல்வி அமைச்சு செயலளவில் அக்கறை காட்ட வேண்டும் என்று வலியுறுத்துகிறோம். ஆசிரியர் பற்றாக்குறை தொடர்ந்தால் தமிழ் மாணவரின் கல்வி கற்கும் அடிப்படை உரிமை மறுக்கப்பட்டதாகும்.

# 13-வது திருத்தத்தை அமுல் செய்வதே இடைக்காலத் தீர்வாக அமையும்

## டக்ளஸ் தேவானந்தா பேட்டி

கொழும்பு, மே 26

''அரசு முன்வைத்துள்ள அதிகாரப் பரவலாக்கல் யோசனைகள் நடைமுறைக்கு வருவதற்கு காலம் பிடிக்கும். பிராந்திய சுயாட்சிக்குரிய அரசமைப்பு ஒழுங்கு விதிகளைக் கொண்டுள்ள 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதே இடைக்காலத் தீர்வாக அமையும்.''

— ஈ.பி.டி.பி. கட்சியின் செயலாளர் நாயகமும், யாழ். மாவட்ட எம்.பியுமான டக்ளஸ் மேற்கண்டவாறு ''சண்டே ரைம்ஸ்'' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார். அப்பேட்டியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தும்படி கோரி நாம் தற்போது முன்வைத்துள்ள யோசனை தொடர்பாக பிரிட்டன், ஆஸ்திரேலியா, அமெரிக்கா ஆகிய நாட்டுராஜதந்திரிகளுடன் கலந்துரையாடினோம். ஏதோ ஓர் இடத்தில் இருந்து தமிழ்மக்களுக்கு உதவ வேண்டும் என்பதை அவர்கள் உணர்ந்துள்ளனர். இதை அவர்களின் சந்திப்பின் போது நாம் உணர்ந்தோம்— என்றார்.

கேள்வி:- ஐ.தே. கட்சியின் முன்னாள் செயலாளர் சிறிசேன கூரேயை சந்தித்தீர்களே! என்ன பேசினீர்கள்?

பதில்:- நண்பர்கள் என்ற முறையில் பேசினோம்; பலதும், பத்தும் பேசினோம். இந்தியாவில் சோனியா காந்தி செய்ததைப்போல் இவரும் செய்யலாம்.

கேள்வி:- ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் தங்களது உறவு எப்படியிருக்கிறது?

பதில்:- விரைவில் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசவிருக்கிறோம். அன்பும், வெறுப்பும் கலந்ததாக அவருடன் உறவு உள்ளது.

கேள்வி:- 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த ஜனாதிபதி இணங்காவிட்டால் தாங்கள் அரசுக்கு வழங்கும் ஆதரவை வாபஸ் பெறுவீர்களா?

பதில்:- 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது அல்ல முதல் பிரச்சினை. இடைக்கால நிர்வாக கவுன்ஸில் ஒன்றை அமைப்பதே தற்போதுள்ள பிரச்சினையாகும்.

கேள்வி:- வடக்கு- கிழக்கு இணைப்பு பற்றி?

பதில்:- வடக்கு - கிழக்கு மாகாணங்களை இணைப்பதால் என்ன தீமை வரப் போகிறது? நாட்டைப்பிரிக்க நாம் உதவவில்லை. ஐக்கிய இலங்கைக்குள் வடக்கு- கிழக்கு மாகாணம் ஓர் அலகாக இருக்க வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும்.

கேள்வி:- தமிழ் மக்களுக்கு தெளிவான தலைமைத்துவத்தை தாங்கள் கொடுக்க விரும்புகிறீர்களா?

பதில்:- இது பற்றி மக்களே முடிவு செய்ய வேண்டும். அவர்களுக்கு டக்ளஸைத் தேவையென்றால் அங்கு நான் இருப்பேன்.

(உ-150-3)

## ''டோனா குளி'' பருத்தித்துறை வந்தது

தனியார் வர்த்தகர்களுக்கான ஒருதொகுதி பொருள்களுடன் ''டோனா குளி' என்றகப்பல் கடந்த வெள்ளிக்கிழமை பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்தது.

அன்றைய தினம் ஒரு தொகுதி மோட்டார் சைக்கிள்கள் அதிலிருந்து இறக்கப்பட்டன.

இனிமேல் ''மாஹோர'' கப்பலிலிருந்து பொருள்கள் இறக்கி முடித்த பின்னரே ''டோனா குளி'' கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கப்படும். (ஐ-173)

# டக்ளஸின் கோரிக்கை: அரசுத் தரப்பு ஏற்காது?

கொழும்பு, மே 26

இடைக்காலத் தீர்வாக அரசமைப்பின் 13 ஆவது திருத்த ஏற்பாடுகளை—முழுமையாக— நடைமுறைப்படுத்த வேண்டும் என ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா விடுத்திருக்கும் கோரிக்கையை நிறைவேற்றும் நிலையில் அரசாங்கம் இல்லை.

கொழும்பில் தகவலறிந்த வட்டாரங்கள் இவ்வாறுதெரிவித்தன.

இது தொடர்பாக அரசுத்தரப்புக் கருத்தை நீதி அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் வெளியிட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

அமைச்சர் பீரிஸ் ஜப்பானில் இருந்த சமயமே டக்ளஸ் இக்கோரிக்கையை முன்வைத்திருந்தார்.

ஜப்பானில் இருந்து நாடு திரும்பிய பின்னர் அமைச்சர் பீரிஸ் இது தொடர்பாக டக்ளஸ் தேவானந்தாவுடன் பேசினார்.

அதன் பின்னர் ஜனாதிபதியுடன் அமைச்சர் பீரிஸ் இவ்விடயம் குறித்து பேச்சு நடத்தினார்.

பின்னர் மீண்டும் டக்ளஸை அமைச்சர் பீரிஸ் சந்தித்தார்.

யாழ். மக்களுக்கு நிவாரணம் வழங்கும் வகையில் இடைக்கால நிர்வாக சபையை வழங்க வேண்டும் என்று டக்ளஸ் அப்போது பீரிஸிடம் மீண்டும் வற்புறுத்தினாராம்.

''இந்தக் கோரிக்கை பலன் தராது. இக்கோரிக்கை தொடர்பாக அரசு விட்டுக் கொடுக்காது''— என்று அமைச்சர் பீரிஸ் பதிலளித்ததாகக் கூறப்பட்டது.

# புனித பிலிப்பு நேரியார் மகோற்சவம் இன்று

புனித பிலிப்பு நேரியாரின் பெருநாள் இன்று ஆகும். அதனையொட்டி இந்த கட்டுரை பிரசுரமாகிறது.

புனித பிலிப்பு நேரியாரின் வரலாறு பல முக்கிய அம்சங்களைக் கொண்டது ஆகும்.

புனித பிலிப்பு நேரியார் புளொறன்ஸ் பட்டணத்தில் மிகவும் செல்வச் சிறப்புள்ள குடும்பத்தைச் சேர்ந்தவர். தேவ தொண்டு செய்வதற்காக 1533 ஆம் ஆண்டு ரோம் நகருக்குப் புறப்பட்டுச் சென்றார்.

அங்கு அவர் தனது சுக போகங்களையும், ஆடம்பர வாழ்க்கையையும் துறந்தார். புரட்சிகரமான புனித வாழ்வை ஆரம்பித்தார்.

ரோமாபுரியில் வாழும் நாள்களில் அவர் பல மைல்களுக்கு அப்பால் உள்ள ஏழு கோயில்களை அடிக்கடி தரிசித்து வந்தார். மக்களுடன் செபத் தியானங்கள் செய்து அவர்களை நல்வழிப்படுத்தினார்.

அனாதைகள், ஏழைகள், நோயாளிகள். மரணப் படுக்கையில் இருப்போர் மீது அன்பு கூர்ந்து அவர்களுக்கு சேவை செய்தார். இப்படியானவர்களுக்குப் பரிசுத்த பரம திரித்துவத்தின் நாமம் கொண்ட ஓர் ஆஸ்பத்திரியை ஸ்தாபித்தார்.

அவர் பத்து வருடங்கள் சுரங்க அறைகள் எனும் வேத சாட்சிகளின் சேமக்காலையில் இராக்காலங்களை செபத் தியானத்தில் கழித்தார்.

1544 ஆம் ஆண்டு அவர் தூய ஆவியானவரின் திருநாளுக்கு சில நாள்களுக்கு முன் தூய ஆவியானவரின் பரவச அருள் பெற்றார்.

அதனால் அவருடைய இடது பக்க நாலாம் ஐந்தாம் விலா எலும்புகளை இணைத்த முருந்து முறிந்து விட்டது. இந்த நிலையில் இவர் 50 வருடங்கள் வாழ்ந்தார்.

தமது ஆத்தும குருவின் விடாமுயற்சியால் வேதசாஸ்திரமும் தத்துவ சாஸ்திரமும் கற்றார். 1551 ஆம் ஆண்டு பரிசுத்த குருவாக அபிஷேகம் செய்யப்பட்டார்.

அவர் சொல்லும் திருப்பலி பூசை நிறைவுகாண இரண்டு மணித்தியாலங்கள் எடுக்கும். பல தடவைகளில் பூசை நேரத்தில் பரவசம் அடைவார். இறைவனின் அருளால் அவர் அசுத்த ஆவியினால் பீடிக்கப்பட்டவர்களையும் நோயாளிகளையும் குணப்படுத்தினார்.

வேத போதகங்கள் செய்வதற்காக தியானப் பிரசங்கியார் என்னும் மாபெரும் சபையை ஸ்தாபித்தார்.

இலங்கையில் ஒல்லாந்து அரசின் வேத கலாபனை காலத்தில் கத்தோலிக்க வேதத்தைப் பரப்பிய குருமார் புனிதபிலிப்புநேரியாரின் தியானப் பிரசங்கியார் சபைக் குருக்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

1995ஆம் ஆண்டு ஜனவரி 21 ஆம் திகதி கொழும்பு, காலி முக மைதானத்தில் பரிசுத்த பாப்பரசரால் முத்திப் பேறு பெற்ற பட்டம் சூட்டப்பட்ட ஆசா, யோசேவாஸ் முனிவர் புனித பிலிப்பு நேரியாரின் தியானப் பிரசங்கியார்சபையை சேர்ந்த ஒரு குரவர். இக்குரவர் வேத கலாபனை காலத்தில்தான் இலங்கையில் கத்தோலிக்க வேதத்தைப் பரப்பி 400 தேவாலயங்களைக் கட்டி உள்ளார்.

இவருக்கு மிக உதவியாக இருந்த யாக்கோமே கொன்சால்வெஸ் என்னும் சாங்கோபாங்க சுவாமிகள் 40-க்குமேற்பட்ட கத்தோலிக்க செபப் புத்தகங்களை எழுதி உள்ளார்.

இன்று இலங்கையில் கத்தோலிக்கரால் பாவிக்கப்படும் செபப்புத்தகங்களும் சாங்கோபாங்க சுவாமிகள் எழுதிய புத்தகங்களின் அடிப்படையிலேயே உள்ளன.

— புனித பிலிப்பு நேரியாரின் அடியார்

## ஆசிய கெரில்லா அமைப்புக்களில்

# ஆயுதக் கொள்வனவில் புலிகளே முன்னணி!

## ஐ.நா. நிபுணர் குழு தகவல்

கொழும்பு, மே 26

ஆசிய நாடுகளின் ஆயுத சந்தையில் ஆயுதங்களைக் கொள்வனவு செய்யும் கெரில்லா அமைப்புகளில் விடுதலைப்புலிகளே முதல் இடம் வகிப்பதாக ஐ.நா. வின் நிபுணர் குழு ஒன்று தயாரித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆசிய நாடுகளின் ஆயுதக் கொள்வனவு தொடர்பாக ஐ.நா. நிபுணர் குழு ஒன்று ஆய்வு செய்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இலங்கை தவிர்ந்த ஏனைய ஆசிய நாடுகளில் இரகசியமாக இயங்கும் கெரில்லாக் குழுக்களுக்கு ஆயுதங்களை விற்பனை செய்வதிலும் விடுதலைப்புலிகள் ஈடுபட்டுள்ளனர் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆசிய நாடுகளில் விடுதலைப்புலிகள் அமைப்பு மட்டுமே விமான எதிர்ப்புப் பீரங்கிகள், சாம்7- ரக ஏவுகணை, டாங்கி எதிர்ப்புக் குண்டுகள், றொக்கட் புறொப்பிளர் குண்டுகள் ஆகிய ஆயுதங்களை வாங்குகின்றது என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-150-3)

## அ. அட்டை விநியோகம்

யாழ்ப்பாணம், மே 26

ஈச்சமோட்டை (ஜே/66) கிராமசேவையாளர் பிரிவுக்கு உட்பட்ட மக்களுக்கான விசேட அடையாள அட்டைகள் நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி முதல் ஈச்சமோட்டை சனசமூக நிலையம் இயங்கும் வீட்டில் வைத்து வழங்கப்படும் என்று அப்பகுதி கிராமசேவையாளர் திரு. சி. க. பாலசிங்கம் அறிவித்துள்ளார்.

(உ-3)

## நாளை

**வைகாசி 13**

செவ்வாய்க்கிழமை

திதி: பஞ்சமி

முற்பகல் 8.11 வரை.

நட்சத்திரம்: திருவோணம்

பின் இரவு 3.15 வரை.

சுபநேரம்: 10. 22 - 11.52

ராகுகாலம்: 2.52-4 22

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## யோகசுவாமி ஜயந்தி தினம்

யாழ்ப்பாணம், மே 26

சிவயோகசுவாமிகளின் 125 ஆவது ஜயந்தி விழா காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள சிவதொண்டன் நிலையத்தில் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 8.00 மணி தொடக்கம் 12.00 மணி வரை நடைபெறும்.

சுவாமிகளின் நற்சிந்தனை, பாராயணம், பூசை, பிரசாதம் வழங்கல் போன்றவை இடம்பெறும். (உ-3)

## சாரண ஆணையாளர்

யாழ். மாவட்ட சாரண ஆணையாளராக டோறஸ் வி. மூ. இராசசிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை காலமும் இவர் யாழ். மாவட்ட சாரண பிரதி ஆணையாளராகப் பணியாற்றி வந்தார்.

(ஐ-51)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தச் செய்திகளைப் பிரசுரிப்பதில் மிகுந்த அவதானமாக இருங்கள்!

## பத்திரிகை ஆசிரியர்களுக்கு அனுருத்த அறிவுறுத்தல்

''இராணுவ நடவடிக்கை தொடர்பான செய்திகளுக்கு மீண்டும் பத்திரிகைத் தணிக்கை கொண்டுவருமாறு பல இராணுவ அதிகாரிகள் எம்மிடம் கோருகிறார்கள். செய்தித் தணிக்கையைக் கொண்டுவருவதைத் தவிர்க்கவே விரும்புகிறோம். ஆகவே பத்திரிகையாளர்கள் அவதானமாகச் செய்திகளை வெளியிட வேண்டும்.''

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தை கொழும்புப் பத்திரிகை ஆசிரியர்களிடம் மேற்கண்டவாறு கோரியிருக்கின்றார்.

''யுத்த நடவடிக்கையைப் பாதிக்கும் வகையில் செய்திகள் வெளியிடுவதைத் தவிர்க்க வேண்டும். யுத்த இரகசியங்களை வெளியிடுவதன் மூலம் இராணுவ நடவடிக்கையில் பாதிப்பை ஏற்படுத்த வேண்டாம்.

இரகசிய விடயங்களைச் சேகரித்து வையுங்கள். இராணுவ நடவடிக்கை முடிந்த பின்னர் அவற்றை வெளியிடுங்கள்'' — இவ்வாறு அவர் மேலும் கோரினர்.

(உ--150-3)

## தமிழகத்திலிருந்து திரும்பிய பின்னர் வவுனியாவில் தங்கியிருக்கும் அகதிகள் யாழ்ப்பாணத்துக்கு?

வவுனியா, மே 26

தமிழகத்துக்கு அகதிகளாகச் சென்று மீளத்திரும்பிய பின் வவுனியா சிதம்பரபுரம் அகதி முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களை யாழ்ப்பாணத்துக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தினால் சிதம்பரபுரம் அகதி முகாமில் வைத்து பராமரிக்கப்பட்டு வரும் இந்த அகதிகளை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பும் நடவடிக்கையின் ஓர் அம்சமாக யாழ்ப்பாணம் செல்ல விரும்புபவர்களின் விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன என்று வவுனியா அரச அதிபர் கே. கணேஷ் தெரிவித்தார்.

அதேநேரம் —

வவுனியாவில் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளவர்களில் ஆயிரம் குடும்பங்களுக்கு அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் சமையற் பாத்திரங்களை வழங்கியுள்ளது.

(உ-150-3)

## உள்ளூராட்சி மன்ற ஓய்வூதியருக்கு விசேட வாழ்க்கைச் செலவுப்படி

தென்மராட்சி, மே 26

உள்ளூராட்சி மன்றங்களில் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு 1991 ஆம் ஆண்டுக்குரிய வாழ்க்கைச் செலவு விசேட படியாக 3 ஆயிரத்து 120 ரூபா வழங்குவதற்கான சுற்றறிக்கை உள்ளூராட்சிப் பணிப்பாளரினால் உள்ளூராட்சி மன்றங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

1991 ஜனவரி முதல் டிசம்பர் வரையான காலப்பகுதிக்குரிய வாழ்க்கைச் செலவு விசேட படியை வழங்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலக ஓய்வூதியர்களும், உள்ளூராட்சித் திணைக்கள ஓய்வூதியர்களும் கடந்த மார்ச் மாதம் இந்த விசேடபடியை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஐ-117)

## தமிழ் கான்ஸ்டபிள்...

(முதலாம் பக்கத் தொடர்)

கொல்லப்பட்டார்.

எஸ். சிவகுமார் (29 வயது) என்ற அந்த பொலீஸ் கான்ஸ்டபிள் காவல் நிலையத்தில் இருந்து 75 மீற்றர் தூரத்தில் உள்ள வாவிக் கரைக்கு மீன் வாங்கச்சென்ற சமயம் இச் சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் சிவிலியன் ஒருவர் காயமடைந்தார்.

அப்பகுதியில் இருந்த சிறிய தேநீர்க்கடை ஒன்று தீயிட்டு எரிக்கப்பட்டது; மீன் பிடி உபகரணங்களும் சேதமாக்கப்பட்டன.

(உ-21-3)

## வலிகாமம் வடக்கில் 11 கிராம சேவையாளர் பிரிவுகளில் மீளக் குடியமர்த்தும் நடவடிக்கை

யாழ்ப்பாணம், மே 26

வலி - வடக்கில் 11 கிராம சேவையாளர் பிரிவுகளில் மக்களை மீளக் குடியமர்த்தும் பணி அடுத்த மாதம் முதலாம் திகதி ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

அப்பகுதியில் உள்ள வீதிகளை திருத்துதல், மற்றும் சுத்திகரிப்பு பணிகளும், பாரிய மரங்களை வெட்டும் வேலைகளும் தற்சமயம் நடைபெற்று வருகின்றன.

கொழும்பு சென்றிருந்த யாழ். அரச அதிபர் செ. பத்மநாதன் திருகோணமலையில் இருந்து கப்பல் மூலம் நேற்று காங்கேசன்துறைக்கு வந்து அங்கிருந்து தெல்லிப்பளைக்குச் சென்று அங்கு நடக்கும் வேலைகளைப் பார்வையிட்டார்.

தெல்லிப்பளை அரசினர் ஆஸ்பத்திரியை தெல்லிப்பளை கூட்டுறவு ஆஸ்பத்திரியில் இயக்குவது குறித்தும் அவர் அங்கு ஆராய்ந்தார். பின்னர் அவர் யாழ். திரும்பினார்.

வலி. வடக்கில் நடைபெறும் மீளக்குடியமர்த்தல் ஏற்பாடுகள், பணிகள் குறித்து ஆராய்வதற்காக செயலகத்தில் எதிர் வரும் வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு கூட்டம் ஒன்று நடைபெறவிருக்கிறது.

(உ-3)

---

# மஹா கும்பாபிஷேக தின விழா

(மணவாளக்கோல நாள்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ளதும், சைவப் பெருவள்ளலார்

சேர். பொன். இராமநாதன் அவர்களால் ஸ்தாபிக்கப்பெற்றதுமாகிய

அருள் மிகு பார்வதி அம்பாள் சமேத

**ஸ்ரீ பரமேஸ்வரன் ஆலய மஹா கும்பாபிஷேக தின விழா**

(மணவாளக்கோல நாள்)

**27 - 05 - 1997 செவ்வாய்க்கிழமை.**

நிகழ்ச்சி நிரல்

காலை 7 மணி நவோத்தர ஸஹஸ்ர சங்காபிஷேகம்

பிற்பகல் 2 மணி திருக்கல்யாணம்

மாலை 4-30மணி மஞ்சத்தில் சுவாமி வெளி வீதி உலா வருதல்

விசேட மேளக்கச்சேரி

தவில் சக்கரவர்த்தி தட்சணாமூர்த்தியின் புதல்வர்

லயஞான மேதை உதயசங்கர் குழுவினர்

விசேட குறிப்பு:- பகல் 12-00 மணிக்கு மகேஸ்வர பூசை நடைபெறும்.

பரமேஸ்வராக் கல்லூரி இயக்குநர் சபை,

ஸ்ரீ பரமேஸ்வரன் ஆலய பரிபாலன சபை,

இந்துமன்றம் - யாழ். பல்கலைக்கழகம்.

(சி-779

---

யாழ். நகரில்

# "சிந்து மருந்தகம்" திறப்பு விழா

சுன்னாகத்தில் தற்போது இயங்கிவரும் 'சிந்து மருந்தகம்' தனது வாடிக்கையாளர்களின் நன்மைகருதி யாழ். நகரில் தனது கிளை ஒன்றை இல. 448, ஆஸ்பத்திரி வீதியில் இன்று காலை 8-04 முதல் 10-09 வரையுள்ள சுபவேளையில் மங்களகரமாக ஆரம்பிக்கவுள்ளது. அத்தருணம் வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவரையும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**சிந்து மருந்தகம்,**
**இல. 448, ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(47176)

---

## ஓமந்தைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்)

வடக்கு நோக்கி முன்னேற முயன்று வருகின்றன.

ஓமந்தைக்கு அப்பால் சுமார் ஒன்றரைக் கிலோ மீற்றர் தொலைவில் உள்ள ரம்பைக்குளம் என்ற இடத்திலேயே புலிகளின் கடும் எதிர்ப்பை படைகள் சந்தித்ததாகக் கூறப்பட்டது.

இந்த முன்னேற்ற நகர்வின் போது புலிகளின் பல முகாம்களையும் பதுங்கு குழிகளையும் தாங்கள் அழித்ததாகவும் —

புலிகளுக்கு பெரும் ஆள்ச் சேதத்தை ஏற்படுத்தியிருப்பதாகவும்—

அரசுத் தரப்புச் செய்திகள் தெரிவித்தன.

கடந்த இருநாள் சண்டைகளில் காயமடைந்த 59படையினர் அநுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக ஆஸ்பத்திரி வட்டாரங்களை மேற்கோள்காட்டி ரி. என். எல். தொலைக்காட்சி நேற்றிரவு தெரிவித்தது.

இரு நாள் சண்டையிலும் ஓர் அதிகாரி உட்பட இருபதுக்கும் அதிகமான படையினர் உயிரிழந்ததாக சுயாதீன செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

(உ-3-5-21-150-164)

## வெள்ளவத்தை...

(முதலாம் பக்கத் தொடர்)

ஒரு வீட்டில் சோதனை நடத்திய சமயம் வீட்டில் கூரை மீது யாரோ நடமாடுவது போல் இருப்பதாக ஊகித்த சிப்பாய் ஒருவர் கூரை மீது சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்.

வீட்டின் பின் பகுதியில் சோதனையில் ஈடுபட்டிருந்த கோப்ரல் ஒருவர் இதனால் கொல்லப்பட்டார். வீட்டில் இருந்த தந்தையும், மகளும் காயமடைந்தனர்.

(உ-21-3)

## அமைச்சரவை...

(முதலாம் பக்கத் தொடர்

ரிக்கை விட்டுள்ளமை ஒரு காரணமாக இருக்கலாம் என்று கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அமைச்சரவை மாற்றம் இடம்பெறுவதற்கு வேறு பல ஊகங்களும் கொழும்பில் தெரிவிக்கப்படுகின்றன.

(உ-3-150)

# சியாரோ லியோனில் ராணுவ சதிப்புரட்சி!

அபிஜோன், மே 26

மேற்காபிரிக்க நாடான சியாரோ லியோனில் அதிபர் அகமது தேஜோன் கபாவின் அரசு அதிரடி இராணுவப் புரட்சி மூலம் நேற்று அதிகாலை கவிழ்க்கப்பட்டது.

அதிகாலை வேளையில் முதலில் சிறையை உடைத்து நூற்றுக்கணக்கான கைதிகளை விடுத்த இராணுவத்தினர் அதன் பின் கபாவின் ஆட்சியைக் கவிழ்த்து விட்டதாக வானொலி மூலம் அறிவித்தனர்.

துப்பாக்கி வேட்டுக்கள் ஒலித்துக் கொண்டிருப்பதாகவும், கடைகள், களஞ்சியங்கள் சூறையாடப்படுவதாகவும் தெவிக்கப்படுகிறது.

இராணுவ ஆட்சியில் இருந்து வந்த அந்த நாட்டில் கடந்த வருடமே பொதுத் தேர்தல் மூலம் கபாவின் தலைமையில் ஆட்சி அமைக்கப்பட்டது.

அதிபர் கபா ஹெலிக்கொப்டர் மூலம் நாட்டில் இருந்து தப்பிவிட்டதாகக் கூறப்படுகின்றது.

நாட்டில் உள்ள அரசியல்வாதிகள் மற்றும் கட்சிப் பிரமுகர்களை உடனடியாக இராணுவத் தலைமையகத்துக்கு சமுகம் கொடுக்குமாறு இராணுவம் உத்தரவிட்டிருக்கின்றது.

(உ-3)

## வள்ளங்களை எடுத்துச் சென்ற படையினர்

திருகோணமலை, மே 26

திருகோணமலையில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வந்த மீனவர்களின் 15 மீன்பிடி வள்ளங்களை கடற்படையினர் அண்மையில் எடுத்துச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதன் காரணமாக மீனவர்கள் தொழில் இன்றி கஷ்டப்படுவதுடன் அங்கு மீனின் விலையும் அதிகரித்துள்ளது.

அதே நேரம்—

திருகோணமலையில் படையினரின் சுற்றிவளைப்பு, தேடுதல் நடவடிக்கைகளும் அதிகரித்துள்ளன. (உ-150-3)

## மன்னாருக்கும் இன்று கப்பல் சேவை

யாழ்ப்பாணம், மே 26

காங்கேசன் துறையிலிருந்து மன்னாருக்கு ''தாரகி'' கப்பல் மூலம் இன்று 290 பயணிகளை அழைத்துச் செல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

இக் கப்பலில் பயணம் செய்யப் பெயர்களைப் பதிவு செய்த பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பொது மக்களை இன்று காலை 7-30 மணிக்கு யாழ். ரயில் நிலையத்துக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளது.

இக்கப்பல் மன்னாரில் இருந்து ஒரு தொகுதி பயணிகளுடன் நாளை மீண்டும் காங்கேசன்துறைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(உ-3)

## சந்திரிகா இன்று குவைத் பயணம்

கொழும்பு, மே 26

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு இன்று குவைத் பயணமாகிறார். வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன்கதிர்காமரும் அவருடன் கூடச் செல்கிறார்.

இலங்கையின் உயர் தலைவர் ஒருவர் குவைத்துக்கு செல்வது இதுவே முதல் தடவையாகும்.

இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார உறவு குறித்து ஜனாதிபதி அங்கு பேச்சுக்கள் நடத்துவார் என அறிவிக்கப்பட்டது.

(உ-3-5)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26-05-1997 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org